www.akaram.eu

# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 8.8 திருவள்ளுவர் ஆண்டு 2051 14.01.2020 - 13.02.2020 ISSN : 2195-6480



வாசகர்கள் மற்றும்
விளம்பரதாரர்கள்
அனைவருக்கும்
இனிய
தமிழர் திருநாள்
நல்வாழ்த்துகள்



FREE Magazine

## அமெரிக்க அடிமையா?
## ஆரிய பௌத்த சிங்கள ஆட்சியா?



## அண்ணனும் தம்பியும் கூட்டாட்சியா? குடும்ப ஆட்சியா?

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


TKS
BEST FOODS
எமது
நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய
பொங்கல்
நல்வாழ்த்துகள்
0049 231 950 468 83
0049 231 950 468 82
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
tksbestfoods
Rheinisch Str. 79, 44137, Dortmund Germany

ortel MOBILE

+ TREUE BONUS[2)]



WORLD FLAT

+ Unbegrenzte Minuten in 47 Länder
+ Deutschland Flat
+ Treuebonus: Ab dem zweiten Monat nur 19,99 €/28 Tage

**24,99 €[1)] /28 Tage**

# OHNE PAUSE NACH HAUSE.



*nur Festnetz

**Ortel. Wir sprechen Deine Sprache.**

Google play · Available on the App Store

**Aufladbar mit:** ortel MOBILE · O2 · e-plus

Ortel Mobile GmbH, E-Plus-Straße 1, 40472 Düsseldorf. Nutzungsvoraussetzung: Erwerb eines Starterpaket (UVP 9,95 €). Standardtarif: Innerdeutsche Gespräche: 9 Cent/Min., Gespräche ins Ausland ab 1 Cent/Minute. Gespräche jeweils zzgl. einmaliger Verbindungsgebühr von max. 15 Cent je Gespräch möglich (alle Preise unter www.ortelmobile.de). SMS 15 Cent. 49 Cent/MB. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Datengeschwindigkeiten innerhalb Deutschlands und in der EU von bis zu 21,6 MBit/s (Download) und 8,6 Mbit/s (Upload). Bei den angegebenen Geschwindigkeiten handelt es sich um die jeweils technisch mögliche Maximalgeschwindigkeit. Die tatsächlich erreichte Durchschnittsgeschwindigkeit kann davon abweichen. Taktung 100 KB Schritte. 1) World Flat (24,99€ pro 28 Tage Optionslaufzeit zubuchbar zum Standardtarif): Unbegrenzte Minuten aus Deutschland in die EU, sowie Gespräche aus Deutschland in alle Netze von Bangladesch, Brasilien, Chile, China, Hongkong, Indien, Indonesien, Japan, Kanada, Malaysia, Puerto Rico, Singapur, Südkorea, Thailand, USA sowie in die Festnetze von Kasachstan, Russland, Slowenien. Dazu eine Flatrate für Gespräche in alle deutschen Netze. Dies gilt auch für Telefonate innerhalb der EU und aus der EU nach Deutschland. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Außerhalb der Inklusivleistung gelten die üblichen Konditionen Ihres Tarifs. Die Verlängerung erfolgt bei ausreichendem Guthaben automatisch, wenn die Option nicht zum Ende der jeweiligen Laufzeit gekündigt wird. 2) Verlängerung 19,99 €/28 Tage.

AKARAM
# அகரம்
மாதாந்த இதழ் Monthly Magazine
14 - தை 2019 13 - மாசி 2020
சுவடி / ISSUE 8.8

**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**
**European Tamils Union e.V.**
**PO. BOX 4153, 59037 Hamm**
**Germany**
**Tel: 00 49 176 47 11 87 11**
Email: editor@akaram.eu

ISSN 2195-6480
**www.akaram.eu**

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.
©ETU e.V. 2014.
All rights reserved.

## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் எமது தமிழர் திருநாள் வாழ்த்துகளுடன் கூடிய வணக்கத்தைத் தெரிவிப்பதில் அகரம் குழுமம் பெருமைப் படுகிறது.**

இந்த ஆண்டு 2020 என்கிற இரட்டைப் பிறவியாகக் காட்சி தருகிறது. எனவே, எமது அரசியல் தலைவர்களின் இரட்டை முகம், இரட்டை வேடம், இரட்டை நாக்கு என்பன வழமைக்கு மாறாக இரட்டிப்பு, மடங்கு மக்களை ஏமாற்றும் திறமையோடு செயற்படும் என்பதை உறுதியாக நம்பலாம். கோட்டபாயாவின் அரச அதிபர் தேர்தல் வெற்றி உலக அளவில் பல அதிர்வுகளை ஏற்படுத்திவரும் நிலையில், தமிழ்த் தலைவர்களின் குண்டுச் சட்டி அரசியலில் மட்டும் அதிர்வு இல்லாமலா போய்விடும்?

தமிழர் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியும் சம்பந்தன் என்கிற ஒற்றை முகம் கமுக்கமாக உலக அரங்கிலிருந்து மறைந்து, சுமந்திரனா? மாவையா? என்கிற அடுத்த தலைமைக்கான போட்டி தலைத் தூக்குவதாகத்

தெரிகிறது. ஆங்கில மொழிப் புலமை, சட்ட அறிவு சர்வதேச ஒளிப் பாய்ச்சல் என்பன சுமந்திரனின் பக்கம் உள்ள சாதகங்கள். மாவைக்கு மூத்த உறுப்பினர் என்பதால் கட்சிக்குள் காணப்படும் வழமையான மசாலா ஒன்றைத் தவிர வேறு கற்பூர வாசனை கிடையாது. அதனால்தான் வட மாகாணசபை முதலமைச்சர் ஓட்டப் பந்தயத்தில் அரை இறுதிச் சுற்றில் கூட அவரால் தேற முடியவில்லை.

எனவே சுமந்திரன், மாவை என்கிற இரட்டையர், ஆட்டத்தில் மாவை காணாமல் போய்விடும் சாத்தியப்பாடு இருக்கிறது. ஆனால்

இரட்டையர் ஆட்டத்தில் மக்கள் மத்தியில் அடிக்கடி வந்து போகும் முகமாக உள்ளவரான சி.விகே சிவஞானம், சுமந்திரனோடு மோதும் கட்டம் வரலாம்.

அப்போது ரணிலைப் போன்ற ஜாதக பலனைக் கொண்ட சிவஞானம், சுமந்திரனை வெற்றி கொள்ள முடியாமல் ஆட்டத்திலிருந்து வெளியேற, சம்பந்தனின் வாரிசாக சுமந்திரன், த.தே.கூ.வின் தலைவராக கோட்ட பாயாவை எதிர்கொள்ளும் நிலை தெரிகிறது. அப்படியான நிலையை சுமந்திரன் வலிந்து எடுத்துக் கொண்டு விட்டதாக அவருடைய கோட்ட பாயா தொடர்பான அறிக்கைகள் காட்டுகின்றன.

இதுவரை அரசமைப்புத் திருத்தச் சட்டம் ஏக்கிய ராஜ்ஜமும், சமஷ்டியும்



ஒன்றுதான் எனப் பேசி வந்த சுமந்திரன் இப்பொழுது, 'சமஷ்டி' என்றே பச்சையாகப் பேசத் தொடங்கி விட்டார். அண்மையில் அவர் ஒரு ஊடகருடன் நடத்திய உரையாடலில் பின்வருமாறு தெரிவித்திருந்தார்,

'சமஷ்டி' என்பது வெறும் பெயர்ப் பலகை அல்ல. அர்த்த புஷ்டியுடன் கூடிய அதிகாரப் பகிர்வை மத்தியிடம் கேட்கிறோம். கடைசி வரைக் கிடைக்காதப் பல நல்ல சிபாரிசுகளை அரசமைப்புத் திருத்த மசோதா மூலம் கடந்த அரசிடம் கேட்டிருந்தோம். அந்த அரசிடம் வைத்த கோரிக்கைகளை, புதிய அரசிடமும் முன்வைத்து ஒத்துழைக்கத் தயாராக உள்ளோம். அதற்காக நாம் அடுத்த தேர்தல் வரை காத்திருக்கத் தேவை இல்லை. இந்தியாவின் பங்களிப்பும், உள்ளீடும் அவசியமானவை".

'எந்த இந்தியாவை சிங்களம் எதிரியாகப் பார்க்க விரும்புகிறதோ? அந்த இந்தியாவின் உதவியை நாடுவதால் சிங்களத்தைச் சீண்டி விட்டு, சலுகை பெறலாம் என நினைப்பது உசிதமான செயலா? பயன்தருமா? என்கிற சுய தேடலை நாம் செய்ய வேண்டாமா? தமிழர் தங்களின் தயவில் சிங்களத்தின் காலடியில் கிடந்து, தனது தேவைகளைச் சிங்களத்திடமே கேட்டுப் பெறவேண்டும் என்கிறது சிங்களம். "என்ன வேண்டுமானாலும் சிங்களத்திடமே கேட்டு வாங்கு" எனச் சொல்லாமல் சொல்லி வருகிறது இந்தியா. "சிங்களத்திடம் கேட்டுத் தருவதை வாங்கு, நீயாக அடித்து எடுக்காதே" என்பதை 1987 தொடக்கம் இந்தியா எமக்கு அடித்துச் சொல்லி விட்டது.

இலங்கை, இந்தியா என்கிற இரட்டை எசமான்களின் அடிமையாக ஈழத்தமிழன் இருக்க வேண்டும் என்பதுதானா எமக்கு இருக்கும் தீர்வு? இந்த இரட்டை இலக்க ஆண்டு, எமது இரட்டை நிலை அரசியலை இந்த

இரண்டு எசமான்களையும் ஏற்காமல், மூன்றாம் வழியான சர்வதேச நாடுகளின் ஆதரவுடன், எமது தாய் மண் மீட்புப் போரைத் தொடர இந்த 2020 பிறந்திருக்கின்றது.

**ஆசிரியர், அகரம் குழுமம்**



த. எதிர்மன்னசிங்கம்

# கோட்ட பாயாவின் வெற்றி!

## இலங்கையில் சிங்களம் ஆரிய சிங்கள பௌத்த இனவெறி ஆட்சியின் வெற்றி!!

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள பௌத்த இனவெறி மிகப் பெரிய ஆதரவுடன் வெற்றி பெற, கோட்ட பாயா ராஜபக்ஷவை வெற்றி பெற வைத்தவை இவரது இத்தகைய ஆவேச தோற்றமும், இஸ்லாமிய பயங்கர வாதத்தில் இருந்து பௌத்த சிங்கள மக்களுக்கான பாதுகாப்பை உறுதிப் படுத்த வல்ல கரங்கள் இதே என்கிற தொனியில் பேசிய பேச்சுக்கள்தான்.

1956 தேர்தலில் எஸ்.டபிள் யு.ஆர்.டி. பண்டாரநாயக்க பின் பற்றிய அதே இனவெறி மொழியுடன் இவர் புத்த மத வெறியையும் சேர்த்து, கத்தோலிக்கத் தமிழ் மக்கள் மீது தானே உருவாக்கிய இஸ்லாமியத் பயங்கரவாத அமைப்பின் மூலம்

குண்டுப் பயங்கரவாதத்தை நடத்தி, அதையே காரணமாக்கி தேர்தலில் அமோக வெற்றி பெற்ற கில்லாடிதான் . தமிழ் முஸ்லிம் மக்களின் காவலன் எனப் பேசித் தனது கடந்த கால தமிழருக்கு எதிரான போர் குற்றங்கள் தன் மீது சுமத்தப் பட்டுள்ள நிலையில், இப்படி ஒரு வாக்குறுதியைத் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு அள்ளி வழங்கி இருக்கிறார்.

இலங்கை இராணுவத்தில் ஒரு சிப்பாயாகப் பல ஆயிரம் தமிழ் மக்களைக் கொன்றவர். புலிகளின் தாக்குதலில் உயிர் தப்பி, அமெரிக்காவில் தஞ்சம் பெற்ற அமெரிக்க குடி உரிமை பெற்றுக் குடும்பத்தோடு வாழ்ந்த வேளையில், அண்ணன் மகிந்த எனப்படும் மகிந்த ராஜபக்ஷ இலங்கை அதிபர் பதவி பெற்றதும், அவரால் திரும்ப கொண்டுவரப்பட்டு, இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்றவர். அண்ணன் ஜனாதிபதி என்பதால் கட்டற்ற அதிகாரங்களைப் பிடியில் எடுத்து சட்டத்துக்கும், நீதிக்கும் விரோதமான மனிதப் படுகொலைகளுக்கும், சித்திர வதைகளுக்கும் சர்வதேச நீதி மன்றத்தில் விசாரனணக்கும், தண்டனைக்கும் உள்ளாக்கப்பட்ட நிலையில் உள்ளவர். பிரபல சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரம துங்கவின் படு கொலைக்கு, நீதிமன்றத்தில் பொறுப்பு கூற வேண்டிய கட்டாயத்தால் மீண்டும் அமெரிக்காவில் ஓடி ஒளிந்தவர்

அங்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வேலை நேரத்தில் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் தாக்கல் செய்த வழக்கில், நீதிமன்ற விசாரணைக்கு அழைப்பானை கொடுக்கப்பட்ட நிலையில், மீண்டும் நாடு திரும்பி ரணில் விக்கிரம சிங்கவின் தயவால் நீதிக்குத் தண்ணிகாட்டி வந்தவர்.

சர்வதேச நீதிமன்ற விசாரணைகளில் இருந்து தப்பிக்க, காலியாகிக் கொண்டிருந்த அதிபர் பதவியைக் குறி வைத்து, உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு கத்தோலிக்கத் தேவாலயங்களில் தமிழ் மக்களைக் குறி வைத்து, இலங்கை முஸ்லீம்களை வைத்து தொடர் குண்டுத் தாக்குதல்களை நடத்தி, நாட்டில் சிங்கள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தம்மால் மட்டுமே முடியும் எனப் பிரச்சாரப்படுத்தி தேர்தலை வெற்றி கொண்டவர்.

இதே வழியில்தான் இந்தியாவின் குஜராத் மாநில முதல்வராக இருந்த நரேந்திர மோடி, முஸ்லீம்களைத் தாக்கி, அந்த சாட்டில் பிரதமர் பதவியைப் பிடித்தவர். பயங்கரவாதியாக அவரை நாட்டில் நுழைய அனுமதி மறுத்த அமெரிக்கா, பிரமர் ஆனதும் புனிதராகி, அமெரிக்க ஜனாதிபதியின் அரவணைப்பை பெற்று, இன்று உலகத் தலைவர்களில் ஒருவராக உலாவருகிறார்.

கோட்ட பாயாவை முதலில் ஆதரிக்கத் தயங்கிய இந்தியா, கேட்டபாயா வெற்றி பெற்றதும் தனது வெளி உறவு அமைச்சர் ஜெய்சங்கரை நேரில் சென்று வாழ்த்தியதோடு, இந்தியாவுக்கு வருமாறு அழைப்பையும் விடுத்தது, பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. எதனால் இந்த அவசர அழைப்பு விடுக்கப்பட்டது ? எப்படியோ கோட்ட பாயாவுக்கு செங்கம்பள வரவேற்பு கொடுக்கப்பட்டு சந்திப்பும் இடம்பெற்றது.

பின்னர் வெளியான பிரகடனங்களும், ஊடக உரையாடல்களும் சந்திப்புதொடர்பான விளக்கத்தை தரத் தவறியதோடு, கோட்டபாயாவின் போக்கில் அவரது பேச்சில் முன்னரை விடக் கடுமை காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. அதனால் சிங்களத்தின் போக்கில் இந்தியாவால் மாற்றத்தை ஏற்படுத்த

எடுத்த முயற்சி பயன்தரவில்லை என்பது தெரிகிறது. எனவே, ஈழத் தமிழர் அரசியல் சிக்கல் தொடர்பாக இந்தியா மீண்டும் மூக்குடைபட்டது போல்தான் தெரிகிறது.



இந்த நிலையில் சுமந்திரன் புதிய அரசில் எமது கருத்துகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்தும் உரிமை பெரிய பின்னடைவைக் கண்டுள்ளது. எமது சமுதாயம், எமது சுதந்திரங்களிலிருந்து விலகச் செய்யும் எந்த வித அடக்குமுறை செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்காது எனச் சூள் உரைத்துள்ளார். வரும் நாட்களில் ஜனநாயகம் பல சவால்களை தரும் என்றும் கூறிய அவர், எல்லா சமூகங்களும் ஒன்றாக இணைந்து, சமஷ்டி அமைப்பு ஜனநாயகம் அவர்களின் பாதுகாப்பு பற்றிய குரல்களை எழுப்ப வேண்டும் எனவும் பேசி உள்ளார். இது அடுத்த பொதுத் தேர்தலுக்கு அவர் போடும் பிரச்சார அடிக் கல் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஜனாதிபதி கோட்டபாயா நாட்டின் அமைதியைப் பாதுகாக்கும் வகையில் அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும், படையினரை அனுப்பி வைக்க அரசாங்க வர்த்த மானி அறிவித்தல் மூலம் ஆணை பிறப்பித்துள்ளார்.

கோட்டபாயாவின் குணாதிசயங்கள் உலகம் அறிந்த ஒன்றுதான். வழக்குகள் , கைதுகளில் இருந்து தப்பிக்க சட்டப்படியான பாதுகாப்பை தமதாக்கிக் கொள்ள ஜனாதிபதி பதவி தேவைப் பட்டது. தமக்கு மக்களின் ஆதரவு நிச்சயமாகக் கிடைக்காது என உறுதியாகத் தெரிந்து கொண்ட கோட்ட பாயா, ஜனாதிபதித் தேர்தலைத் திட்டமிட்டு மக்களிடையே பீதியை ஏற்படுத்தி, வெற்றிக் கனியை பறித்துக் கொண்டார்.

மேற் குறிப்பிட்ட அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் படைகளை அனைத்து மாவட்டங்களிலும் நிறுத்துவதன் மூலம், தமிழ் முஸ்லிம் மக்கள் பல நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்படும் ஆபத்தும் வரலாம்.

இந்தியப் பிரதமரைச் சந்தித்த பின்னர் சமஷ்டி ஆட்சியோ, அதிகாரப் பகிர்வோ கொடுக்கப் போவதில்லை எனவும் கோட்ட பாயா அறிவித்திருப்பதன் மூலம், அவரது ஆட்சி கெடுபிடிகள் நிறைந்த ஒன்றாக இருக்கும் என்பது உறுதியாகிறது.

இத்தகைய பின்னணியில் சுமந்திரனின் அறைகூவலும் காணாமல் போக்கடிக்கப் பட்டவர்கள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு, விடுவிக்கப் படாதவர்களின் உறவினரின் போராட்டங்கள் எனப் பல மக்கள் போராட்ட அறை கூவல்கள் விடுக்கப் பட்டுவரும் நிலையில், தமிழ் மக்களின் வருங்காலம் கவலை தருவதாக உள்ளது.

இந்தியாவை நம்பியும் பலன் இல்லை, இலங்கையை நம்பியும் பயன் கிடையாது. ஆனால் எமது அரசியல்வாதிகள் நம்புவோம். அதை விட்டால் வேறு வழி இல்லை என்கிற புளிச்சுப் போன அரசியலைத்தான் செய்யப் போகிறார்கள். ஈழத் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் இப்படித்தான் தொடருமா?




Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de

தேவன்

# நான் தெள்ளியவோர் முழுச்சவிக்கி

அமெரிக்க ஆயுத உற்பத்தியாளர்கள் இரண்டு வழிகளில் ஆயுத விற்பனை செய்கின்றனர். முதலாவது அயல் இராணுவ விற்பனைகள், அமெரிக்க இராணுவ கேந்திரமான பென்ரகன் ஊடாக இரு அரசுகளுக்கிடையே நேரடியாக பேரம்பேசி விற்கப்படுவது இது. மற்றது நேரடி வர்த்தக விற்பனைகள். இதில் ஆயுத வணிக முதலாளிகள் நேரடியாக நாடுகளுடன் பேரம்பேசி, அரசியல் உரிமம் பெற்று விற்பது. இந்த பேரத்தில் ஏராளமான ஊழல்களுக்கு இடமுண்டு.

இது தவிர அமெரிக்க அரசு தனது இராணுவ ஆயுதக் கிடங்குகளிலிருந்து மிகக் குறைந்த விலையிலும், சமயங்களில் இலவசமாகவும் தனக்கு வேண்டிய நாடுகளுக்கு கொடுப்பதும் உண்டு. தேவைக்கு அதிகமான பாதுகாப்புப் பொருட்களாக ஒதுக்கப்பட்டவை என இதற்கு பெயர். இது தவிர பிறநாட்டு இராணுவங்களுக்கு பயிற்சிகள் அளிப்பது, பிற நாடுகளுடன் சேர்ந்து கூட்டுப் பயிற்சி எடுப்பது என்பதெல்லாம் இன்று அதிகமாகியுள்ளதை நாம் அறிவோம். செப்டம்பர் 11, 2001க்கு பிறகு இவை இன்னும் அதிகமாகியுள்ளன.

உலகளவில் மிகப் பெரிய ஆயுத விற்பனை நிறுவனங்கள் என முன்னணியில் இருக்கும் ஏழு நிறுவனங்களில், முதல் ஆறு நிறுவனங்களும் அமெரிக்காவினுடையவை. இதில் ஏழாவதான தொம்சன் CSF மட்டுமே பிரான்சினுடையது. ஏறக்குறைய முதல் ஆறு நிறுவனங்களும் உலகெங்கும் தமக்கிடையில் போட்டி போட்டுகொண்டு, ஆயுதங்களை விற்பனை செய்வதில் வல்லவர்கள். அவர்கள் எக்காரணம் கொண்டும் தமது ஆயுத விற்பனையை நிறுத்தப் போவதில்லை. காரணம் கடந்த 2018ஆம் ஆண்டில் ஆயுதம் விற்பனை மூலமாகப் பெற்ற வருமானம் 190 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.



சமவேளையில், அமெரிக்க வீதிகளிலும், பாடசாலைகளிலும் துப்பாக்கிச் சூடு நடைபெறுவதைத் தவிர்க்க, பாதுகாப்பு அமைச்சு 65 மில்லியன் டொலர்களைச் செல்வழிக்கிறது. ஒரு சிலபேரின் சாவுக்காக, மொத்த வருமானத்தை நிறுத்த முடியாதல்லவா..? ஆதலால் இது இன்னும் தொடரும்.

எழுத வந்த விடயம் அதுவல்ல, தமிழீழத்தில் நோர்வேயின் தலைமையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டு, சற்று அமைதி நிலவிய காலத்தில், இலங்கைக்கான அமெரிக்காவின் ஆயுத வழங்கல் அமோகமாக நடை பெற்றிருக்கிறது. 2008ஆம் ஆண்டில் மட்டும் 10 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுத தளவாடங்களை அமெரிக்க அரசு, இலங்கைக்கு அனுப்பியிருக்கிறது. இலங்கையை விட, அங்கோலா தொடக்கம் அவுத்திரேலியா வரை அமெரிக்கா தனது ஆயுத விற்பனையை அமோகமாக நடாத்தியிருக்கிறது.

அமெரிக்கா, “சர்வதேச இராணுவ கற்கைகளுக்கும் பயிற்சிக்குமான திட்டத்தின்” **(IMET)** கீழ், இலங்கைக்கு வருடந்தோறும் 500,000 வழங்கி வருகின்றது. அந்நிய இராணுவ நிதியுதவியின் கீழே 2006ம் ஆண்டு, மேலதிகமாக ஒரு மில்லியன் டொலரும், அந்நிய நாட்டு நிதியுதவியாக 7.4 மில்லியன் டொலரும் வழங்கப்பட்டன. 2007ம் ஆண்டிலிருந்து அமெரிக்கா, இலங்கைக்கு நேரடி இராணுவ உதவி வழங்குவதை நிறுத்தியதாகச் சொன்னதெல்லாம் வெற்றுக் கூச்சல். அதேவேளை போர் நடந்து கொண்டிருந்த வேளை, இந்தியாவும், அமெரிக்காவும் புலனாய்வுத் தகவல்களையும் இலங்கை இராணுவத்திற்கு வழங்கின. இந்த உதவிகள் யாவும் இலங்கை அரசின் யுத்த செலவினத்திற்கு பெரிதும் உதவியுள்ளன.

அமெரிக்காவின் ஒத்துழைப்புடன், பிரிட்டன் கூட இலங்கைக்கான ஆயுத விற்பனையில் நேரடியாக ஈடுபட்டது. பிரிட்டிசு நாடாளுமன்ற உறுப்பினர் ***Joan Ruddock :***




"எனது விசாரணையின் படி கடந்த காலாண்டில் மட்டும் 7மில்லியன் பவுண் பெறுமதியான ஆயுதங்கள் விற்றமைக்கான தரவுகள் கிடைத்துள்ளன. கவச வாகனங்கள், கனரக இயந்திரத் துப்பாக்கிகள், வேறு இராணுவ உபகரணங்கள் போன்றவற்றை விற்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. 2006க்கும் 2008 க்கும் இடைப்பட்ட காலத்தில் 12 மில்லியன் பவுன் பெறுமதியான பிரிட்டிசு ஆயுதங்கள் இலங்கைக்கு விற்கப்பட்டுள்ளன." *(Socialist Worker, May 12)*

"பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த, இந்து சமுத்திரத்திற்கான வல்லரசுப் போட்டிக்குள் இலங்கை சிக்கிக் கொண்டுள்ளது. இந்து சமுத்திரம் பூமியின் மிகப்பெரிய சமுத்திரம் அல்ல. ஆனால், உலகில் 70% எண்ணெய்க் கப்பல்களும், 50 % சரக்குக் கப்பல்கள் இந்து சமுத்திரத்தின் ஊடாகவே பயணம் செய்கின்றன. இந்து சமுத்திரத்தை யார் கட்டுப்படுத்துகிறார்களோ? அவர்கள் முழு ஆசியாவையும் கட்டுப் படுத்துகின்றனர்." என்றார் அமெரிக்க கடற்படை தளபதி ***Alfred Maher.*** ஆதலால் விடுதலைப்புலிகள் இருப்பு எமக்கு ஆபத்தாகவே முடியும் என்பதே அவர் சொல்லவரும் கருத்தாகும்.

இரு நாடுகள் தத்தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது பேச்சுவார்த்தையின் மூலமாகவோ அல்லது போரின் மூலமாகவோ தீர்வுகாணும். உள்நாட்டில் ஏற்படும் போது அது புரிந்துணர்வு அல்லது பேச்சுவார்த்தையின் மூலமாகவோ அல்லது அடக்குமுறையின் மூலமாகவோ தீர்வு காணப்படும். ஆனால், இந்த அச்சுறுத்தல்கள் சில நாடுகளால் தந்திரமாக உருவாக்கப்பட்டு, போரைத் தூண்டிவிட்டு, அதில் தனது நாட்டின் ஆயுதங்களை இருநாடுகளுக்கும் பெருமளவில் விற்பனை செய்து, அந்நாடுகள் பயனடைகின்றன. அத்தகைய நாடுகளில் முதன்மையானது அமெரிக்கா. ஆனால், ஈழ மண்ணில் தமிழர்களது ஆட்சி நிறுவப்பட்டால், அது தமக்கு கெடுவாய்ப்பாக அமையும் என்பதை உணர்ந்தே எமது பலத்தை அழிக்க அமெரிக்கா முன்வந்தது என்றால் அதில் மிகையில்லை.




இலங்கை இராணுவம் தமிழீழப் பகுதிகள் மீது ஆக்கிரமிப்பைத் தொடங்கியபோது அமெரிக்க இராணுவம் அளித்த ஆயுத உதவிகள் வரைவாக இணைக்கப்பட்டுள்ளது.




மூலம்: *<https://www.securityassistance.org/sites/default/files/2008>*
*<https://www.securityassistance.org/sites/default/files/2009>*


புதுப்பொலிவுடன்
மீண்டும்....
ESTD 1992
santhoshphotography.com
மங்கையரின் மனங் கவரும்
2020 வருடத்திற்கான
புத்தம் புதிய ஆடைகள்
Gopara Gnanam
Rheinische Str.62
44147 Dortmund
Mob.: 0171 330 65 42,
0176 246 54 009
Wedding Sarees
DISCOUNT!!
வாழ்க்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்

# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**







தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

**மண்மணம் மாறாத சுவைதரும்**
**தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்**

மொத்தமாகவும், சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை விற்பனை செய்ய
விரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள்




ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

**www.jaffnastores.com**
**info@jaffnastores.com**

**வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்**
**இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்**





# ஐரோப்பிய ஒன்றியம் ஏவிய தடை மீதான வழக்குப்பதிவு மற்றும் தடையினைக் களைதல்

ஐரோப்பிய ஒன்றியமானது, தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதித்த தடை இன்னமும் நீடிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. பெயரளவில் ஆங்காங்கே சில நாடுகளில் விடுதலைச் செயற்பாட்டாளர்கள் மீதான தடை நீக்கப்பட்டுக் கொண்டிருப்பினும், அவை ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையை எந்த விதத்திலும் பாதிக்காது என்ற உண்மையை முதலில் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பெலிசோனா நீதிமன்றம் தனது இறுதி முடிவில், தமிழீழ விடுதலைச் செயற்பாட்டாளர்கள் மீதான தடை அவசியமற்றது என்பதையும், சுவிசின் செயற்பாட்டாளர்கள் நியாயத்துக்குப் புறம்பாக எதையும் செய்யவில்லை என்பதையும் தீர்ப்பாக எடுத்துரைத்தது.

**வெறுமனே “விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குக” என வழக்குத் தொடுப்பதில் எவ்வித பயனுமில்லை.**

இந்த வழக்கின் முடிவுகளைச் சாதகமாக ஆக்கிக்கொள்வதற்கு மிகவும் கடினமாக உழைத்தவர் யேர்மனியில் வாழும் திரு.விராஜ் மெண்டிஸ் அவர்களே. இனத்தில் சிங்களவராக இருந்தாலும், தமிழர்களின் விடுதலைச் செயற்பாடுகளுக்கு மிகவும் உறுதுணையாக நிற்பவர் என்ற வகையில், அவரது செயற்பாடுகள் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களை விடவும் மேலானதாகவே காணப்படுகிறது.


விராஜ் மென்டிஸ்

சுவிசு நாட்டின் முடிவுகளைப் பின்பற்றி, விராஜ் மென்டிஸ் தலைமையில் இயங்கிவரும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு- பிரேமன் தற்போது விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய நீதிமன்றம் விதித்த தடை மீது வழக்குத் தொடுப்பதற்காகச் செயற்படத் தொடங்கியுள்ளார்கள்.

வெறுமனே “விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குக” என வழக்குத் தொடுப்பதில் எவ்வித பயனுமில்லை. ஏனெனில் அவ்வாறு தடை நீக்கியபின் எமது இனத்தின் மீது நடாத்தப்பட்ட இன அழிப்பிற்கான நீதி என்ன? என்பது எம்முன்னே நிற்கும் கேள்வியல்லவா. ஆதலால் வழக்கு கீழ்க்கண்டவாறு தொடுக்கப் படவுள்ளது.

*A proposed legal action at the European court of justice..*

***The accusation is that by putting the LTTE on the terror list in 2006, the EU is culpable in undermining the ongoing peace process by triggering the War of extermination against the Tamil people.***

சுருங்கக்கூறின் : “விடுதலைப்புலிகள் மீது ஐரோப்பிய நீதிமன்றம் விதித்த தடையின் காரணமாகவே, இவ்வளவு கொடூரமான தமிழின அழிப்பு சிங்களத்தால் இலகுவாக நிகழ்த்தப்பட்டது” என்ற அடிப்படையிலேயே வழக்குப் பதியப் படவுள்ளது. அதாவது விடுதலைப்







புலிகள் மீது தடையில்லா திருந்திருப்பின் தமிழின அழிப்பு நடைபெற்றிராது என்பதை வழக்கின் தீர்ப்பாகப் பெற்றால், அது பாரிய சாதகமாற்றங்களுக்கு வழிவகுக்கும். இவ்வழக்குக்கான தகவற் திரட்டு, மற்றும் இன அழிப்பு ஆதாரங்கள் ஆகியவற்றை ஒன்று சேர்க்கும் பணியில் திரு.விராஜ் மென்டிஸ் குழுவினர் ஈடுபட்டுள்ளார்கள்.

“இது ஏற்கனவே காலம் கடந்த செயற்பாடே. இவ்வழக்கானது 2009இன் இறுதிக்குள் தொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த இழுபறியான காலத்திற்குள் ஐரோப்பிய தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் பலர் கைது செய்யப்பட்டும் கூட, அதை மக்கள் போராட்ட வடிவமாக மாற்றி, கைது செய்யப்பட்டவர்களை மீட்க புலத்தில் தலைமை தாங்கும் எவரும் முன் வரவில்லை, அவர்கள் மென்மேலும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியிலேயே கூடிய கவனம் செலுத்தினார்கள்” என்பது மென்டிஸ் அவர்களது அனுபவக் கூற்றாக இருக்கிறது. உண்மையில் ஐரோப்பிய நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கான பலமும், ஆளணி வளமும் இங்கே நிர்வாகம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் தமிழர் அமைப்புகளிடம் இருந்தும் கூட, யாரும் அதற்கு முன்வராதது ஏன் என்பதற்கான பதில் “எல்லாம் முடிந்து விட்டது” என்ற இழி மனநிலையே தவிர வேறில்லை.

இந்த வழக்கின்பால் ஏற்படப்போகும் பணச்செலவும், நீண்டகாலச் செயற்பாட்டுத் தேவையும் எமது எதிர்காலத் தடைநீக்கியாக அமையும் என்பதை கருத்திற் கொண்டு உலகெங்கும் பரந்து வாழும் உறவுகள் அனைவரும் திரு.விராஜ் மென்டிஸ் அவர்களுக்குக் கைகொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

# பின்னோக்கிச் சுழலுமா வரலாற்றுச் சக்கரம்?

சண் தவராஜா







தம்மை யூதர்களுக்கு நிகரானவர்கள் எனக் கூறிக் கொள்ளும் ஈழத் தமிழர்கள் ஒற்றுமை விடயத்தில் மாத்திரம் மூச்சுவிட மாட்டார்கள். 'தமிழன் என்றோர் இனமுண்டு. தனியே அவர்க்கொரு குணமுண்டு' என நாமக்கல் கவிஞர் வே. ராமலிங்கம் எழுதிய தனது கவிதையில் தமிழர்களின் நற்குணங்களைப் பட்டியல் இட்டார். அந்த 20 வரிக் கவிதையில் ஒரு இடத்தில் கூட தமிழர்கள் ஒற்றுமையானவர்கள் எனக் குறிப்பிடவே இல்லை.

சரித்திர காலம் முதல், ஈழப் போராட்டம் வரை தமிழர்களின் வரலாறு அவ்வாறுதான் இருந்து வந்திருக்கின்றது. நடப்பு நிகழ்வுகளும் இத்தகைய நிலையே தொடரும் என்றே எதிர்வுகூறி நிற்கின்றன.






சிறிலங்காவில் அரசுத் தலைவர் தேர்தல் முடிந்து, அடுத்த கட்டமாக மார்ச் மாதத்தில் பொதுத் தேர்தல்கள் நடக்கலாம் என்ற எதிர்வு கூறல்கள் முன்வைக்கப் பட்டிருக்கின்ற இந்தச் சூழலில், தமிழ் அரசியல் கட்சிகள் யாவும் தேர்தலுக்கான வியூகங்களை வகுக்கத் தொடங்கியிருப்பதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. பிரதான அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பாலும் தனித்துப் போட்டியிடும் அறிகுறிகளே உள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் மற்றும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகிய கட்சிகளின் இந்தக் கூட்டு தனது வாக்கு வங்கியில் சரிவைச் சந்தித்து வருவதைக் கடந்த உள்ளாட்சித் தேர்தலின் போது அவதானிக்க முடிந்தது. நல்லாட்சி அரசாங்கத்தில் ஆளுங்கட்சியின் பங்காளிக் கட்சி போன்ற தோற்றத்துடன் செயற்பட்டு வந்த நிலையில், 'ஆளுங் கட்சிக்கு எதிரான இயல்பான எதிர்ப்புணர்வை' இக் கட்சி கொண்டிருந்தது எனப்

Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்தி மஹால் மண்டபம்

சகலவிதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும், நேர்த்தியாகவும் உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில் மனம் கவர்ந்த ஒரே அழகிய மண்டபம்...



திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா அனைத்து வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

**800 இருக்கை வசதியும்**
**400 வாகன தரிப்பிடமும்**
**கொண்ட மண்டபம்**



வாழக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K.KOWTHAMAN | S.MANIVANNAN | K. VIJAYASURESH |
|---|---|---|
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

web : www.varasithy-mahall.ch mail : vasasithymahall@hotmail.com

பார்த்தாலும், அதற்கும் அப்பால் எதிரணியில் உள்ள கட்சிகள் கூட்டமைப்பை விட மக்கள் பிரச்சனைகளை அணுகும் முயற்சியில் ஒருபடி முன்னே நிற்கின்றன என்பதையும் மறுத்துவிட முடியாது.

தற்போதைய நிலையில் சிங்களத் தேசியக் கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழர்கள், அத்தகைய கட்சிகளை ஆதரிப்போர் என்பவற்றை நீக்கிப் பார்க்கும் போது தமிழ் அரசியல் கட்சிகள் 3 பெரும் பிரிவாகத் தென்படுகின்றன. இதில் முதலிடம் வகிப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அதிலும் கூடப் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தில் இருந்து அதன் பொதுச் செயலாளர் என்.ஸ்ரீகாந்தா, முன்னாள் நாடாளுமன்றச் உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் அண்மையில் பிரிந்து சென்று புதிய கட்சியொன்றை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

அடுத்த பெரிய கட்சியென கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைக் குறிப்பிடலாம். மூன்றாவதாக முன்னைநாள் வட மாகாண முதலமைச்சர் சீ.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி பெரும்பாலும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, மற்றும் என் ஸ்ரீகாந்தா தலைமையிலான புதிய தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து போட்டியிடலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்த மும்முனைப் போட்டிக்கு அப்பால் யாழ்ப்பாணத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும், மட்டக்களப்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் களத்தில் உள்ளன.

வடக்கை விடவும் கிழக்குத் தேர்தல் களம் ஓரளவு வித்தியாசமானது என்பது தெரிந்ததே. இங்கே, தமிழ்க் கட்சிகள் மத்தியில் உள்ள பிளவு முஸ்லிம் கட்சிகளுக்குச் சாதகமாக அமையும் என்ற நிலைப்பாட்டிலேயே கட்சிகள் தங்கள்








தேர்தல் வியூகங்களை வகுத்து வருகின்றன. அந்த அடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிரணியில் உள்ள ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் மட்டக்களப்புக் கிளையினர் தாம் கூட்டமைப்புடன் இணைந்தே போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளனர். அக்கட்சியின் முன்னை நாள் மாகாணசபை உறுப்பினரான இரா. துரைரெத்தினம் அண்மையில் நடாத்திய ஊடகர் மகாநாட்டில் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, 'தமிழ்க் கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து எதிர்வரும் தேர்தலைச் சந்திக்க வேண்டும். தமிழர் பிரதிநிதித்துவத்தை அடுத்த நாடாளுமன்றத்தில் அதிகரிக்கச் செய்ய வேண்டும்' என்ற சாரப்பட கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் அவர்கள் ஒருசில வாரங்களின் முன்னர் தெரிவித்திருந்தார். நடந்து முடிந்த அரசுத் தலைவர் தேர்தலை ஒட்டி தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்க பல்கலைக் கழக மாணவர்கள் முயற்சி செய்த போதிலும், அது வெற்றியளிக்க வில்லை. தொடர்ந்து அத்தகைய முயற்சி எதுவும் எடுக்கப்பட்டதாகவும் தெரிய வில்லை. கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கட்சிகளுக்கிடையிலான ஒருங்கிணைவு எதுவும் சாத்தியமாகும் வாய்ப்புக்கள் இல்லை என்றே கூறலாம்.

எனவே, வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை தமிழ்க் கட்சிகள் இடையே மும்முனை அல்லது நான்கு முனைப் போட்டியை எதிர்பார்க்கலாம். இதன் விளைவு யாருக்குச் சாதகமாக அமையும்? என்பதைச் சொல்லாமலேயே புரிந்து கொள்ளலாம்.

தென்னிலங்கையைப் பொறுத்த வரை, அரசுத் தலைவர் தேர்தலில் கண்ட தோல்வியில் இருந்து ஐக்கிய தேசிய முன்னணி இன்னமும் மீளவில்லை. மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன எத்தகைய பாதையில் பயணிப்பது என்ற தடுமாற்றத்தில் இருப்பது போலத் தெரிகின்றது. அரசுத் தலைவரான கோத்தாபய ராஜபக்ச மற்றும் தலைமை அமைச்சரான மகிந்த ஆகியோருக்கிடையிலான அதிகாரப் போட்டி ஒன்று இருப்பது போன்றே

நடப்பு நிகழ்வுகள் உள்ளன.

சுவிஸ் தூதுவராலயப் பணியாளர் விவகாரம், முன்னாள் அமைச்சர்களின் கைது விவகாரம் போன்றவை புதிய அரசுத் தலைவரின் நற்பெயருக்கு சர்வதேச அரங்கில் களங்கத்தைத் தோற்றுவிக்கும் என்பது தெரிந்தும், அத்தகைய திசையிலேயே காரியங்கள் நடந்தேறுகின்றன. இத்தனையும், நாடாளுமன்றப் பெரும்பான்மை இல்லாத ஒரு சூழ்நிலையிலும், மார்ச் மாதம் வரை அரசுத் தலைவர் நினைத்தால் கூட நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட முடியாது என்பது தெரிந்தும் நடைபெறுகின்றன என்றால், அவை எதிர்க்கட்சிகளிடையே ஐக்கியத்தை வளர்க்கவே உதவும் என்பதே யதார்த்தம்.

தற்போது உள்ள அரசியல் சூழலில் பொதுத் தேர்தல் நடைபெற்றால் அது பொதுஜன பெரமுனவிற்கு தனித்து ஆட்சியமைக்கும் பெரும்பான்மை உறுப்பினர்களைப் பெற்றுத் தருமா? என்ற கேள்வி உள்ளது. சிலவேளை, அத்தகைய பெரும்பான்மை கிட்டாதவிடத்து சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு அவசியமாகலாம். நடப்புநிலையில், முஸ்லிம் கட்சிகளின் உதவியைப் பெறுவதை விட, தமிழ்க் கட்சிகளின் ஆதரவைக் கோருவதையே பொதுஜன பெரமுன விரும்பும் எனலாம். அவ்வாறான ஒரு நிலை உருவானால், தமிழ்க் கட்சிகளுள் பெரிய கட்சியான கூட்டமைப்பு நேசக்கரம் நீட்டுமா? என்ற கேள்வி எழுகிறது.

இந்த வேளையில், ஒருசில மாதங்களுக்கு முன்னர் எம்.ஏ.சுமந்திரன் பேசிய ஒரு விடயம் ஞாபகத்திற்கு வருகிறது. ''கூட்டமைப்பு, அரசாங்கத்தில் இணைந்து கொண்டு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனத் தமிழ் மக்கள் நினைக்கிறார்கள்.'' எதனை மனதில் வைத்து அவர் இவ்வாறு சொன்னாரோ தெரியவில்லை. ஆனால், அது நனவாகக் கூடிய காலம் உருவாகலாம் என்றே தெரிகின்றது.

'வரலாற்றுச் சக்கரம் ஒரு போதும் பின்னோக்கிச் சுழலாது' என்றொரு வாசகம் உள்ளது. ஆனால், கூட்டமைப்பு அதனைப் பொய்யாக்குவதற்கான அறிகுறிகளே அதிகம் உள்ளன.




# Swiss Life
Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே...! அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.

## சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே!

**அவதானமாகச் செயற்படுங்கள்.**

உங்கள் கடனுக்காக வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங்கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்

**அறிவு • நேர்மை • நாணயம்**

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்


**Sägestrasse 79**
**3098 Köniz**

**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**

email : krishnasamy.thileepan@swisslife-select.ch
internet : www.swisslife-select.ch


Cicero Member ID 15787
www.cicero.ch

**So fängt Zukunft an.**



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF















ஆய்வாளர் சேது, அமெரிக்கா

பாகம் –II

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

**ஒரு வலுவான பண்பாட்டினால் மட்டுமே வலுவான சமூகத்தையும், சமூக அமைப்புகளையும் கட்டி எழுப்பமுடியும்.**

உலகின் தலைசிறந்த இராணுவ தத்துவ மேதைகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளும் உண்மை என்னவென்றால், இராணுவ உத்திகளைவிட, இராணுவ வீரர்களின் உளவியல்தான் போரில் அதிமுக்கியமானது. எவ்வளவு நல்ல திட்டமாக இருந்தாலும், கோழைகளை வைத்துக் கொண்டு ஒரு இராணுவம் இம்மியளவும் நகரமுடியாது.

***"Clausewitz's greatest contribution to the theory of war was in emphasizing psychological factors…he showed that the human spirit is infinitely more important than operational lines and angles."***

ஈழப்போரில் ஒரு பெரிய புதிர் என்னவென்றால், புலிகளால் எவ்வாறு மனபலத்தில் உலகிலேயே நிகரற்ற, இதற்கு முன் வரலாற்றில் எங்கும் காணாத படையை உருவாக்க முடிந்தது என்பதுதான். இதைப் பற்றி ஆராய்ச்சிகள் நடந்துள்ளனவா? எனத் தேடினேன். பெரும்பாலான ஆராய்ச்சிகள் புலிகள் "பயங்கரவாதிகள்" என்ற முடிவுக்கு வந்துவிட்டு, அதற்கேற்ற உளவியலைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதிலிருந்து நாம் கற்பதற்கு பெரிதாக ஒன்றும் இல்லை.

ஆனாலும் பெரும்பாலோனோர் புலிகள்தான் உலகிலேயே மனபலத்திலும், தாக்குதலிலும் நிகரற்றவர்கள் என்று ஒப்புக் கொள்கிறார்கள். புலிகள் ஒரு பலமான விடுதலை இயக்கமாக வளர்வதற்கு என்ன உளவியல் காரணங்கள்? என்பது தான் நமது பார்வையில் முக்கியம். நான் தேடிய அளவில் அதுபோன்ற ஆராய்ச்சிகளைக் காணமுடியவில்லை. இக்கட்டுரையின் நோக்கம் அந்தத் தேவையை ஓரளவு பூர்த்தி செய்வதே. இது நான் அறிந்த



வரலாற்றுத் தகவல்களையும், உளவியல் தத்துவங்களையும் அடிப்படையாகக் கொண்டே இருக்கும் என்பதால், இது ஒரு முழுமையான ஆய்வு அல்ல. இதை ஒரு ஆரம்பமாகவே எடுத்துக்கொள்ள வேண்டும்.

பொதுவாக ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதில் தமிழர்களின் பண்பாடு என்ன என்றால், அனைவருக்கும் நினைவுக்கு வருவது நண்டு கதைதான். நண்டுகள் எவ்வாறு ஒன்றை ஒன்று பின்னுக்கு இழுக்கிறதோ, அதுபோல ஓர் ஒற்றுமையற்ற சமூகம்தான் தமிழ்ச்சமூகம். இதை “நண்டுப் பண்பாடு” என்று எடுத்துக் கொள்வோம்.

## நண்டுப் பண்பாடு

சுயநலம்தான் குறிக்கோள். நானும் என் குடும்பமும் நன்றாக இருக்கவேண்டும். மற்றவற்றைப் பற்றி பெரிய கவலை இல்லை. யாருக்கு என்ன தலையில் எழுதி இருக்கிறதோ, அதுதான் நடக்கும்.

சமூகத்தில் இருக்கும் மற்றவரைப் போட்டியாகக் கருதுவர். ஒருவரின் முன்னேற்றம் / இலாபம் மற்றொருவரின் நட்டமாகப் பார்க்கப்படும். இதன் விளைவாக ஒருவருக்கொருவர் நண்டுபோல இழுத்துக் கொண்டு ஒத்துழைப்பற்று இருப்பர்.

ஒழுக்கம் என்பது அவரவர் விருப்பம். இன்பம் : எளிமையான காமம், பொழுதுபோக்கு, போதை என்கிற மாயைகளுக்குள் சிக்கிக் கொள்வர். இவை இன்பம் தருவதுபோலத் தோன்றினாலும், முடிவில் துன்பத்தையே கொடுக்கும்.

சமூக கட்டமைப்புகள் : மக்களிடையே ஒத்துழைப்பின்மையால், மக்களால் இயக்கப்படும் பொதுநல அமைப்புகள் குறைவாகவே இருக்கும். மேலும் அனைத்து அரசு மற்றும் பொதுநல அமைப்புகளிலும் நண்டுகள் புகுந்து, அமைப்புகளைச் சீர்கெடுக்கும். குடும்ப நிறுவனங்களை அதிகமாகக் காணலாம். அரசியல் கட்சிகளும், குடும்ப நிறுவனங்களாக மாறும். சட்டங்கள் கேலிக் கூத்தாகும். யாரும் அதைப் பெரிதாக பொருட்படுத்த மாட்டார்கள். அனைத்திற்கும் சமூகம் அரசையே நம்பி இருக்கும், ஆனால் அரசு அமைப்புகளும் மிக மோசமான நிலையிலேயே இருக்கும். மிக முக்கியமாக இப்படிப்பட்ட சமூகத்தால் சிக்கலான அமைப்புகளை உருவாக்கி, சிக்கல்களைத் தீர்க்கும் வல்லமை இருக்காது.

இதுபோன்ற சமூகங்களில் நண்டாக இருந்தால்தான் பிழைக்க முடியும். நேர்மையாக இருக்க வேண்டும் என நினைப்பவர்களுக்குப் பிழைக்கத் தெரியாதவன் என்ற பட்டம்



GGS
FOOD SERVICE
CONTACT
R.P. PARAMESH
02305 93 73 75
017 93 91 607

கட்டப்படும். இவ்வாறான சமூக உருவாக்கத்திற்கு தனி மனிதனைக் குற்றம் கூறமுடியாது. அந்தப் பண்பாட்டில் அவ்வாறு இருந்தால்தான் பிழைக்க முடியும். இங்கு பிழை என்பது பண்பாட்டில்தான் உள்ளது. நெரிசலில் (*Stampede*) மாடுகள் எவ்வாறு குருட்டுத்தனமாக ஒன்றின்பின் ஒன்றாக ஓடுகிறதோ, அதுபோல சமூகம் ஓடும். இதுபோன்ற நிலையில் சமூகம் அழிவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

இவ்வாறு செயல்படும் நண்டுகளை வைத்து ஒரு பெரிய இயக்கத்தைக் கட்டி எழுப்புவதென்றால், அது முடியாத காரியம். இதிலிருந்து தப்பிக்க ஒரேவழி மாற்றுப் பண்பாடுதான். அதை உணர்ந்து பிரபாகரன் அவர்கள் உருவாக்கியதுதான் “புலிப் பண்பாடு”. எதற்கும் உதவாத நண்டுகளை எடுத்து உலகில் அனைவரையும் விஞ்சிய புலிகளாக எப்படி உருவாக்க முடிந்தது?

## புலிப் பண்பாடு

ஒரு பெரிய கட்டிடம் கட்டுவதற்கு பலமான அடித்தளம் வேண்டும், அதுபோல ஒரு பெரிய இயக்கத்தை கட்டி எழுப்ப, அதற்குத் தேவையான அடித்தளம் என்பது பண்பாடு தான். ஆயுதப் போராட்ட ஆரம்பகாலத்தில் பலவேறு குழுக்கள் இருந்தாலும், முதன் முதலில் பண்பாட்டுத் தேவையை உணர்ந்து, ஓர் அதியுச்ச ஒழுக்கமான பண்பாட்டை பிரபாகரன் அவர்கள் உருவாக்கினார்கள். அந்த பண்பாட்டின் முக்கிய அங்கங்களாக நான் கருதுவது:

## தனிப்பட்ட சமூகம் (Community)

ஒரு புதிய பண்பாட்டை உருவாக்குவதற்கு ஒரு “தனிப்பட்ட சமூகம்” முக்கியமானது. அச்சமூகத்திற்கு யார் உறுப்பினர்? யார் இல்லை? என்பதை தெளிவாக வரையறுக்கும் எல்லை இருக்கவேண்டும். சமூகத்தில் ஒரு






மனிதனின் செயல்பாட்டை பெரும்பங்கு தீர்மானிப்பது, அச்சமூகத்தில் தன்னைச் சுற்றியுள்ள மற்றவர்கள் எவ்வாறு செயல்படுகின்றனர் என்பதுதான். தன்னை சுற்றி இருப்பவர்கள் நண்டுகளாக இருந்தால், ஒருவர் நண்டாக மாறுவார். சுற்றி இருப்பவர்கள் புலிகளாக இருந்தால், புலியாக மாறுவார். இதுதான் அடிப்படை உளவியல்.

ஒரு தனிச் சமூகத்தை உருவாக்கும்பொழுது எளிதாக புதிய விதிகளையும், நடைமுறைகளையும் உருவாக்கி, அதிக ஒத்துழைப்பான சமூகத்தை உருவாக்கி விடலாம். புலிகள் ஒரு போர் புரியும் கொரில்லா இயக்கம் என்பதால், காடுகளில் ஒரு சமூகமாக தனித்து இயங்குவது அவர்களுக்கு இயற்கையிலே அமைந்தது. பிரபாகரன் அவர்கள் அதீத ஒத்துழைப்பான இயக்கம் தேவை என்பதை முதலில் உணர்ந்து, அதற்கேற்ற விதிகளை உருவாக்கினார். இதுதான் தான் அவர்களின் வெற்றிக்கு அடிப்படை காரணம் என்கிறார் ஆய்வாளர் பரணி கிருஷ்ணரஜனி. மற்ற போராட்ட இயக்கங்கள் இதில் கவனம் செலுத்தாதனால் அவர்களால் பெரிதாக வளர முடியவில்லை.



**சுயம்**

ஒரு மனிதனின் குணங்கள் பிறப்பில் தீர்மானிக்கப் படுவதல்ல. மனிதனின் குணங்களை மரபணுக்களும், பண்பாடும் இணைந்து உருவாக்குகின்றன. பிறக்கும்போது மனிதன் குறிப்பிட்ட பண்புகளுடன் பிறக்கிறான். ஆனால், பின்பு வளரும்பொழுது அவன் வாழும் சமூக சூழல், அப்பண்புகளை சூழலுக்கு ஏற்றவாறு மாற்றுகிறது. இந்தப் பண்புகள் வளர்ந்து பெரியவனான பின் மாற்றுவது கடினமானது, ஆனால் முடியாத காரியம் இல்லை .

ஒரு விடுதலை இயக்கத்திற்கு முக்கியமான பண்பு “நான் யார்” என்ற சுய

அடையாளம். ஒருவனுக்கு சுயம் உருவாகியபின் அந்த சுயத்தைக் காப்பதுதான் அவன் குறிக்கோள். சுயத்திற்கு தீங்கு ஏற்பட்டால் வலிக்கும், கடுங்கோபம் வரும். சுயம் என்பது ஒருவனின் உடல் மட்டுமல்ல. எதற்கெல்லாம் வலிக்கிறதோ, அவற்றை எல்லாம் அவன் சுயத்தில் அங்கமானதாக எடுத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக ஒருவரின் புதிதான வண்டியில் ஒரு கீறல் ஏற்பட்டு அவர் துடித்தால், அவரின் வண்டியும் அவரின் சுயத்தில் அங்கமானதே.

புலிகளின் வெற்றியைப் புரிந்துகொள்ள, அவர்களின் சுயம் என்ன? என்ற புரிதல் முக்கியமானது. ஒரு புலி வீரனின் சொத்து என்பது, ஒரு துவக்கும் சயனைடு குப்பியும்தான். புலி வீரர்கள் முதல் ஐந்து வருடங்கள் திருமணம் கூடாது என்பதாலும், பற்று வைக்க குடும்பமும் இல்லை. புலி வீரர்களின் ஒரே இலக்கு என்பது "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்று அனைவரும் அறிந்ததே!. அதனால் ஈழம் தான் புலிகளின் சுயம் என்று ஆனது.

பெரும்பாலோனோர் இளவயதில் இயக்கத்தில் இணைவதால், அவர்களின் சுயத்தை வடிவமைப்பது எளிதாகிறது. மேலும் சுற்றியுள்ளோர் அனைவரும் ஈழம் தான் சுயம் என்று இயங்கும் பொழுது, புதியவர்களுக்கும் அந்த சுயம் வந்துவிடுகிறது. ஈழம் தான் ஒருவரின் சுயம் என்று ஆனபின், தங்கள் சுயத்தை காக்கவேண்டும் எனில், அவர்கள் ஈழத்தைக் காக்கவேண்டும். அவர்களுக்கு போரில் இறப்பது பெரிய துன்பம் அல்ல. தான் உயிர் துறந்தாலும், ஈழம் வாழ்ந்தால் அந்த சாவும் வாழ்வாகவே என்பது அவர்கள் பார்வையில் தெரியும். இவ்வாறு உயிர் பயம் முற்றிலும் போய்விட்டதால், எந்த கொம்பனையும் எதிர்க்கும் வல்லமை பெற்றார்கள்.

இந்தியா வந்து மிரட்டிய போதும், அவர்கள் குறிக்கோளில் நகரவில்லை. முடிவில் இந்தியாதான் மிரண்டு ஓடியது. பிரபாகரன் அவர்களே "ஈழக் குறிக்கோளில் இருந்து பின் வாங்கினால் என்னை சுட்டுவிடுங்கள்" என்று கூறியிருக்கிறார்கள். அவர்களின் சுயம் என்பது "ஈழம்" மட்டுமே. அதில்லாமல் அவர்களால் உயிர் வாழமுடியாது.





சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவல்லரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles

தாலி மற்றும்
பொன்னுருக்குதல்,
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்

ஒவ்வொரு வருடமும் தைமாதம்
எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை
சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100 CHF என 12
மாதம் 1200 CHF இணைய
விரும்புவோர் உங்களது
பெயர்களை முன்கூட்டியே
பதிவு செய்யலாம்.

nfo@nsjewellery.com

Neugasse 58, 8005 Zürich, Switzerland
www'nsjewellery'com

Tel: 044 440 60 50 Fax: 044 440 60 52

*இனிய தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்*

உயர்தர புடவைகள்
மற்றும் துணி வகைகள்
வாங்க சிறந்த இடம்

## Rani palace

044 440 60 52
ranipalace60@gmail.com

**Tel : 044 440 60 52**

Neugasse 60, 8005 Zurich - Switzerland





## அவனா? இவன்!

# அவன் பேசினால் தேசியம் இவன் பேசினால் இனவாதம்

2010ல் அவன் படித்த பாடசாலைச் சுவரில் தன் பெயரைப் பதித்து, தமிழினத்தை வெற்றி பெற்ற சாதனையை வரலாற்று சாதனை படைத்த கோட்ட பாயா இன்று, நாட்டின் மக்கள் தலைவனாக (ஜனாதிபதி என்கிற சமக்கிருதச் சொல்லைத் தூய தமிழில் அப்படித்தான் பொருள்படும்). அப்படியானால் அவன் எந்த மக்களின் தலைவன்?

எந்த மண்ணில் எவனது தலைவனாக அவன் தன்னை நிலை நிறுத்தி, எவனது வரலாற்றை, எவனது வரலாறாகக் கற்பலகைப் பதிவாக விட்டுப் போகிறான். வென்றவன் கதைதான் வரலாறாக உலகம் போற்றுகிறது.

2010ல் சிங்களப் படை அதிகாரிகாரியாக வந்து போனவன், இன்று நாட்டின் மக்கள் தலைவனாக (இவனுடைய விருப்பத் தலைவனாக ஆண்டானாக இருக்கிறான்) ஆனால், இவனோ விருப்பமுடன் அவனுடைய அடிமையாக தனது பாரம்பரியத்தை இழந்து, பரம்பரையை அந்நிய பகைமை இனத்துக்கு நிரந்தர விருப்பத்தக்கு உரிய அடிமையாக்கி விட்டு, முட்டாளின் மோட்சத்தில் அமைதி அடைகிறான்.

இவன் படித்த பள்ளிக் கூடத்தில் அவன் நிற்கிறான். இனவாதியான அவன், தேசியவாதியாக பார்க்கப் படுகிறான். இவனோ தனது வீட்டையும், நாட்டையும் அவனிடம் பறி கொடுத்துவிட்டு, தனது இழந்து விட்ட

தேசியத்தை மீட்கப் பேசினால் தமிழ் இனவாதியாக, தமிழ் தீவிரவாதியாக, தமிழ் பயங்கரவாதியாகத் தண்டனை பெறும் நிலையில் இருக்கிறான்.

**இந்தக் கேவல நிலைக்கு தமிழ் மக்களின் தலைவனாக 1977ல் நடித்து, எதிர்க்கட்சித் தலைமை பெற்று, ஜே.ஆர். வெற்றி பெற்றால் தமிழருக்கு ஈழம் கிடைக்கும் எனத் தமிழ் மக்களை ஏமாற்றி, ஜே.ஆரின் தேர்தல் வெற்றிக்கு உதவிய அமிர்தலிங்கத்தின் உண்மை முகம் வெளியே தெரிய வர 8ஆண்டுகள் தேவைப் பட்டது.**

அதே ஏமாற்று வேலையை 2019ல் சம்பந்தன் தலைமையிலான தமிழர் தேசியக் கூட்டமைப்பு செய்தது என்பதை தமிழ் மக்கள் தெரிந்து கொள்ள எத்தனை வருடங்கள் ஆகுமோ யார் அறிவார்? அமிர்தலிங்கத்தைத் தண்டிக்க புலிகள் அமைப்பு இருந்தது. ஆனால், 2019ல் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பும், அதன் தலைவர் சம்பந்தனும் செய்த துரோகத்தால் புலிகள் அமைப்பும், தமிழ் மக்களும் அழியக் காரணமான, இனத் துரோகத்தை செய்து அவனும், அவனது மண்ணும், மக்களும் சிங்கள இனத்துக்கு நிரந்தர அடிமைகளாக்கிய த.தே. கூட்டமைப்பையும், அதன் தலைமையையும் தண்டிக்க யார் வருவார்? என்ன வழி?

தமிழும் அழிந்து, தமிழ் இனமும் அழிந்து, தமிழர் தேசமும் அழிந்து விட்ட வரலாறு 2019 நவம்பர் 16ம் திகதி இலங்கையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில், கொலை வெறியன் கோட்ட பாயாவின் அமோகமான சிங்கள பவுத்த மக்களின் வாக்குப் பலத்துடன் பெற்ற வெற்றியால் படைக்கப் பட்டது. **அவன் சிங்களத்தில் பேசினால் தேசியம். இவன் தமிழில் பேசினால் தமிழ் பயங்கரவாதம்!!**




# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்



"உளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### வாழ்வு

மரணத்தின் பின்பும்
வாழவேண்டுமா ?
வாழும்போது "நான்" என்பதைக்
கொன்றுவிடு

### சுவர்

மனைச்சுவர்கள் கல்லால்
கட்டடப்பட்டிருக்கலாம், – உங்கள்
மனச்சுவர்களை அன்பினால்
கட்டுங்கள்

### தன்னம்பிக்கை

கால்களை விடவும்
தன்னம்பிக்கை வேகம் கூடியது
காயம் பட்டாலும்
கலங்காது ஓடும் அது

### முகம்

எல்லா முகங்களின் பின்னாலும்
முகமூடி இருக்கிறது.
இங்கு முகமூடியே நிரந்தரம்
முகங்கள் அல்ல.



# அகர கவிக்களம்....



## சொல்

வில்லிலே விட்ட அம்பும்
வாயிலே வந்த சொல்லும்
வதைத்த போது அந்த இடம்
வலியினால் துடிக்க
சொல்லும் ஆறுதல்
துளைத்த இடத்தை
நிரப்பாது.
வார்த்தையைவிட முன்
யோசித்து சொல்,
வலித்த பின்பு மன்னிப்பு
வலியை போக்கா.

**கெங்கா ஸ்டான்லி**



## ஆசை!...

பொருள், பண்டம், சொத்து பத்து
காணி, பூமி, பவுண், பெண்
அனைத்துக்கும் ஆணிவேர்
பணம் என்னும் பேராசையே!..

## உணவு!...

ஏழைக்குச் சாப்பாடு இல்லை
உணவு கொட்டிக் கிடக்கிறது
பணக்காரனால் சாப்பிடமுடியவில்லை
சீர் தூக்கியுள்ளது சீனி வருத்தம்!...

## அலைவு!...

காட்டழிப்பு பூமியில் நித்தம்
பழங்கள் உண்டு மகிழ
அங்கும், இங்கும் அலைகின்றன
பேசும் கிளிகள் கூட்டம்!...

## மகிழ்ச்சி!...

தாய் மண்ணின் வளங்கள்
ஏராளம் படர்ந்து கிடக்க,
உழைப்பை மறந்து இன்றோ
போதைப் பொருட்களை தினம்
உண்டு மகிழ்கிறான் தமிழன்!...

**வ.சிவராசா**

PAGEVISION

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

www.pagevision.ch

உங்கள் கணினிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்



ATX Standard Tower, 2x USB Front Anschluss, in 5 Farbvariationen erhältlich
Intel Pentium G4400, 2x 3.30GHz, Dual Core, 3MB Cache
Intel H110 Chipsatz, Gigabyte GA-H110M-DS2 Mainboard
8GB DDR4 Ram, Markenprodukt, 2133MHz
120GB SSD Laufwerk, 550MB/s lesen - 350MB/s schreiben
22x DVD-Brenner +/-/RAM Dual Layer
Kartenleser für alle Formate
8-Kanal Sound für Surround Systeme
10/100/1000Mbit Netzwerkanschluss für Netzwerke und Breitband-Internet
Windows 10 installiert und konfiguriert, inkl. DVD und Lizenz
21.5" Breitbild-Flachbildschirm, 5ms, integrierte Lautsprecher
kabellose Maus (optisch) und Tastatur

## PC Systems

**CHF 695.- inkl. MwSt**



AMD E-450 Dual Core Prozessor, 2x 1.66GHz
4GB DDR-3 RAM, Markenprodukt
400GB Festplatte, 8MB Cache, 5400RpM
DVD-Brenner Laufwerk, ±R/±RW/Dual Layer
AMD® A50M FCH Chipsatz
15.6" HD LED Display, spiegelnd, Auflösung 1366 x 768
ATI Radeon HD6310 Grafik integriert, bis 1469MB dynamisch
10/100Mbit Netzwerkkarte
integriertes Mikrofon und Lautsprecher
Gewicht 2.3kg inkl. Akku
300Mbit WLAN, UMTS optional
Schweizer Tastatur inkl. 10er Zahlenblock
374 x 250 x 14.3-34.1mm
Netzteil, Akku (Laufzeit 3-4.5h)
Windows 7 Home Premium, installiert und Konfiguriert, inkl. DVD und Lizenz

## Note Books

**CHF 499.- inkl. MwSt.**

## Reparaturen Aller Marken

**Sehr Schnelle Lieferung!**
**Hauslieferungen**
**Vor-Ort Installationen**
**Netzwerklösungen für Firmen**
**Reparaturen aller Marken!**

günstige gebrauchte Computer
Reparaturen aller Marken

**www.pckaufen.ch**

Tellstr.31, 8004 Zürich - Tel : 043 317 9101
Kirchgasse 33, 8302 Kloten - Tel : 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel : 052 203 15 50
Rosengartenstrasse 4-8037 Zürich - Tel : 044 271 00 07

## iPhone Reparaturen

www.iphonefan.ch




பூமிபுத்திரன்

# கொதிக்கும் இந்தியா

## அணைக்குமா இந்துத்துவா

இந்தியாவில் டிசம்பர் 12ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக, நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பல வாரங்களாகத் தொடரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் இதுவரை 25க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. 'ஆர்ப்பாட்டங்களை அடக்குதல்' என்ற பெயரில் காவல்துறையினர் - குறிப்பாக முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் - மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பா.ஜா.க. ஆளும் உத்தரப் பிரதேசத்தில் மாத்திரம் 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ராஜஸ்தான், மேற்கு வங்காளம், கேரளா, மகாராஷ்ட்ரா, மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கார் ஆகிய எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலங்கள் தாம் தமது மாநிலங்களில் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த அனுமதிக்கப் போவதில்லை என அறிவித்துள்ளன. எதிர்க் கட்சிகள் மாத்திரமன்றி பா.ஜா.க. வின் நட்புக் கட்சிகளும் சில இடங்களில் பா.ஜா.க. கட்சியைச் சேர்ந்தோரும் குறித்த சட்டத்திற்குத் தமது எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளனர்.

குளவிக் கூட்டுக்குக் கல்லெறிந்த கதையாக - உருவாகியுள்ள பிரச்சனையைச் சமாளிப்பதற்கு வழி தெரியாத மத்தியில்



ஆளும் பா.ஜா.க. அரசு, எதிர்க் கட்சிகளின் சூழ்ச்சி - என்ற வரையறைக்குள் எதிர்ப்புக்களை வகைப்படுத்தி, அவற்றை சட்டம் ஒழுங்குப் பிரச்சனையாகச் சுருக்கி அடக்கி விடலாம் எனச் சிந்தித்துச் செயற்பட்டு வருகின்றது. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைச் சமாளிப்பதற்காக சட்டத் திருத்தத்திற்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்து, தனது நடவடிக்கைக்கு ஆதரவு உள்ளதாகக் காட்ட முயற்சி செய்த போதிலும் அதில் வெற்றி காண முடியாமல் அரசு திணறி வருகின்றது.

மற்றொருபுறம், இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் இந்துக்களுக்கு எதிரான முஸ்லிம்களின் சதி எனக் காட்டவும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஆனால், யதார்த்தத்தில் இந்தச் சட்டம் இந்தியாவில் வாழும் இந்துக்களையும், முஸ்லிம்களையும் முன்னரை விடவும் நெருங்கி வரவே உதவியிருக்கின்றது. தொடரும் ஆர்ப்பாட்டங்களில், முஸ்லிம்களை விடவும் அதிக எண்ணிக்கையில் இந்துக்களே கலந்து கொண்டிருப்பதுவும், அவர்கள் இஸ்லாமியர்களை ஆதரித்துக் கருத்துகளை வெளியிடுவதையும் அவதானிக்க முடிகின்றது.




அதேவேளை, 'இஸ்லாமிய விரோத'ச் சட்டம் என்பதால் இந்துக்கள் அனைவரும் அதனை ஆதரித்து நிற்பார்கள் என்ற பா.ஜா.க.வின் எதிர்பார்ப்பும் பொய்த்துப் போயுள்ளது.

குறித்த சட்டத் திருத்தத்தினை எதிர்க்கும் - இன, மத பேதமற்ற - ஜனநாயக சக்திகள் 'இந்தியா மதச் சார்பற்ற நாடு என்ற இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மிக முக்கிய கேட்பாட்டுக்கு' புதிய குடியுரிமைத் திருத்தச் சட்டம் முரணானது என வாதிடுகின்றன. குறித்த சட்டம் மக்களை மத அடிப்படையில் பாகுபடுத்த முயல்கின்றது. எனவே, அது அரசியலமைப்பிற்கு முரணானது என்ற அடிப்படையில் பல வழக்குகளும் உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பிலான விசாரணைகள் ஜனவரி மாதம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையோடு வெற்றி பெற்ற பா.ஜா.க. அரசு 'கோவால்கர் கனவு கண்ட இந்துஸ்தான்' என்ற இராச்சியத்தை நிறுவ முயற்சிக்கின்றது என்ற கருத்து முற்போக்குச் சக்திகளால் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றது. இதனைச் சுருக்கமாக விளக்குவதானால் இஸ்லாமிய நாடுகள் எவ்வாறு 'ரியா சட்டத்தின் அடிப்படையில்; இயங்குகின்றனவோ, அதேபோன்று இந்து இந்தியா மனு சாஸ்திரத்தின் அடிப்படையில் இயங்க வேண்டும் என்பதே பா.ஜா.க. வின் சிந்தனை என்கிறார்கள்.

மனு சாஸ்திரம் சாதிய அடிப்படையிலான நான்கு வர்ணங்களை வலியுறுத்துவதோடு மட்டுமன்றி, சாதிய அடிப்படையிலான குலத்தொழில்களை வலியுறுத்துவதுடன், பிராமணர் அல்லாதோருக்கான கல்வியையும் மறுக்கிறது. அத்தோடு பெண்களை அடிமைகளாக நடாத்துவதற்கும் ஆதரவு வழங்குகின்றது. அத்தகைய இந்து ராச்சியத்தில் இந்துக்கள் அல்லாத ஏனைய மதத்தினருக்கும் இடமில்லை. ஒன்றில்


AGAM
Healthy and tasty Foods
அ.க.ம்
NEW ARRIVAL
அகத்தின் சுவை சமையலில் தெரியும்
உங்கள் சமையலுக்கு தேவையான அனைத்து உணவுப் பொருட்களையும் தரமான அகம் தயாரிப்பில் உங்கள் அபிமான கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
பொங்கல் வாழ்த்துக்கள்!
StaR-Impex
WISHING YOU ALL A VERY PROSPEROUS AND JOYFULL PONGAL
HAPPY PONGAL!
www.star-impex.de




அவர்கள் இந்துக்களாக மாற வேண்டும் அல்லது நாட்டைவிட்டு வெளியேற வேண்டும்.

இத்தகைய மறைமுக வேலைத் திட்டத்தைக் கொண்ட இந்தச் சட்டம் கூடவே ‘குடிமக்கள் பதிவேடு’ என்ற உப திட்டத்தையும் கொண்டுள்ளது. இதன்படி இந்தியாவில் வாழும் ஒவ்வொருவரும் தான் மட்டுமன்றி, தனது பெற்றோரும் இந்தியர்கள் என்று பல்வேறு ஆவணங்கள் மூலம் நிருபிக்கக் கோருகின்றது. தற்போது அவர்கள் கைவசம் உள்ள அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், கடவுச் சீட்டு, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை உள்ளிட்ட ஆவணங்கள் இந்த விடயத்தில் செல்லுபடியாகாது எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு தம்மை ‘இந்தியக் குடிமக்களாக’ நிருபிக்க முடியாதவர்கள் நாடற்றவர்களாகக் கருதப்பட்டு, முகாம்களில் அடைக்கப்படுவார்கள். இது நாசி யேர்மனியை நினைவு படுத்துகின்றது. இந்தக் குடிமக்கள் பதிவேடு நடைமுறை அசாம் மாநிலத்தில் ஏற்கனவே பரீட்சிக்கப்பட்ட ஒன்று. அங்கே 19 இலட்சம் பேர் நாடற்றவர்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளனர். பல ஆயிரக் கணக்கானோர் தம்மை குடிமக்களாக நிருபிக்க முடியாத நிலையில், தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுள் முன்னாள் இந்திய ஜனாதிபதியின் குடும்ப உறுப்பினர்களும் அடக்கம்.

இந்தியா போன்ற எழுத்தறிவு குறைவான, வறிய மக்கள் அதிகம் வாழும் நாட்டில் இரண்டு தலைமுறைக்கு முந்திய ஆவணங்களைக் கோருவது என்பது நடைமுறையில் எத்துணை தூரம் சாத்தியமானது?

பா.ஜா.க. இரண்டாவது தடவையாக ஆட்சியைக் கைப்பற்றியதன் பின்னால், முதலில் காஸ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை நீக்கி, அந்த நாட்டை இரண்டு துண்டுகளாகப் பிளவுபடுத்தியது. இந்திய - பாகிஸ்தான் பிரிவினையின் போது தனிநாடாக விளங்கிய காஸ்மீர், பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தியாவிடம் நேசக்கரம் நீட்டிய போது, இந்தியா வழங்கிய வாக்குறுதிகளை பா.ஜா.க. அரசு இலகுவாக மறந்துவிட்டு, காஸ்மீர் மக்களின் முதுகில் குத்தியது.

அடுத்ததாக, அயோத்தியில் பாபர் மசூதி இடிப்பு தொடர்பான வழக்கில் தனக்குச் சாதகமான தீர்ப்பைப் பெற்றுக் கொண்டது. இவை இரண்டும் முஸ்லிம் சிறுபான்மை மக்களுக்கு விரோதமானவையே. அதேபோன்று தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள சட்டமும் ஈற்றில் முஸ்லிம்களையே இலக்காகக் கொண்டுள்ளது என்பது இரகசியம் அல்ல.

தற்போது நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்டங்கள் கிட்டிய எதிர்காலத்தில் முடிவிற்கு வருவதற்கான வாய்ப்புக்கள் தென்படவில்லை. உச்ச நீதிமன்றில் தீர்ப்பு வெளியாகும் வரை அவை தொடரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. தீர்ப்பு தங்களுக்குச் சார்பானதாகவே வெளியாகலாம் என ஜனநாயக சக்திகள் நம்புகின்றன. நீதிமன்றத் தீர்ப்புக்களைச் சட்டத்தின் அடிப்படையில் அல்லாமல் ‘நம்பிக்கைகளின் அடிப்படையில்’ பெற்றுக் கொள்வதில் நம்பிக்கை கொண்ட பா.ஜா.க.வும் தீர்ப்பு தங்களுக்குச் சாதகமாகக் கிடைக்கும் என நம்பலாம்.

எது எப்படி இருந்தாலும், இந்தியாவின் நற்பெயர் உலக அரங்கில் கெட்டிருக்கின்றது. உலகின் பல நாடுகளிலும் இந்திய அரசுக்கு எதிராக நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள், இந்தியாவில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள், அவற்றைக் காவல்துறையினர் கையாளும் வழிவகைகள் தொடர்பான செய்திகள் போன்றவை உல்லாசப் பயணிகளை அச்சம் கொள்ளச் செய்திருக்கின்றன. இலட்சக் கணக்கான உல்லாசப் பயணிகள் தமது இந்தியப் பயணங்களை இரத்துச் செய்துள்ளனர். தாஜ்மகாலைப் பார்வையிட முன்பதிவு செய்திருந்த சுமார் 2 இலட்சம் பேர் தங்கள் பதிவுகளை இரத்துச் செய்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

மறுபுறம், அமெரிக்கா, பிரித்தானியா, ரஸ்யா, இஸ்ரேல், சிங்கப்பூர், கனடா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகள் தமது பிரஜைகளுக்குப் பயண எச்சரிக்கைகளை விடுத்துள்ளன. பல நாடுகளின் தலைவர்கள் குடியுரிமைத் திருத்தச் சட்டம் தொடர்பில் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ள அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபை தனது கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

உள்நாட்டில் எழுந்துள்ள அதிருப்தி, பொருளாதாரப் பாதிப்பு, வெளிநாடுகளில் இந்தியாவின் நற்பெயருக்கு ஏற்பட்டுள்ள களங்கம், ஜார்கண்ட் மாநில சட்டசபைத் தேர்தலில் ஏற்பட்டுள்ள தோல்வி என்பவை இந்துத்துவாக் கொள்கையைக் கட்டுப்படுத்துமா? இல்லையேல், நாட்டை மேலும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லுமா? என்பது அடுத்த ஓரிரு மாதங்களில் தெரிந்துவிடும்.


NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE

நீங்கள் ஒரு முக்கிய நிகழ்வை
சிறப்பாகக் கொண்டாடப் போகின்றீர்களா?
பிறந்தநாள் விழா, திருமண விழா போன்றவைகளா?
நாங்கள் உங்கள் விருப்பங்கள் மற்றும்
எண்ணங்களுக்கு அமைவாக இலங்கை மற்றும்
இந்திய உணவு வகைகளை அந்த நாட்டு முறைப்படி
தயாரித்து வழங்குகிறோம்!

உங்களுக்கு உதவி தேவைப்படுகின்றதா?
எவ்வித சிரமமும் இன்றி எமது திறமையான
ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளனர்!




திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள்!

நிழல்படம் மற்றும் வீடியோ!

விநியோகம் மற்றும் பரிமாற்றம்!

Kontakt: Siemensstr. 25, 40721 Hilden





Rufen Sie uns an:
Tel.: 0211/7691974 | Mobile: 0173/7424955

# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

**வணக்கம் பாருங்கோ, எப்பிடி இருக்கிறியள்?**

**வருசக்கடைசி முதல் வருசத் தொடக்கம் வரை கொண்டாடி இருப்பியள் எண்டு நினைக்கிறன். இனி மெல்ல மெல்ல பழைய நிலைக்கு மாறவேணும் பாருங்கோ. இப்பவே ஓடத்தொடங்கினாத்தான் வருச நடுப்பகுதியில திருப்பி விடுமுறைக்கு கொஞ்சம் கையில புழங்கும் என்ற நிலை எல்லாருக்கும் பொதுவானதுதான் பாருங்கோ.**

வாழ்க்கை வாழத்தான் என்று சொல்லுற பலர், வாழாமலே காசைச் சேர்க்கிறதுக்கும், கடவுளைக் கும்பிடுறதுக்குமெண்டே ஓடித்திரியினம் பாருங்கோ. அதுதான் வாழ்க்கை எண்ட நினைப்புச் செய்யுற வேலைதான் அது கண்டியளோ. உப்பிடியே போனால், கடைசியில ஒன்றுமே மிஞ்சாது பாருங்கோ.

ஏனெண்டால் பாருங்கோ, காசும் உண்மையில்லை, கடவுளும் உண்மையில்லை. சரி காசை வைத்தாவது எங்கட வாழ்க்கையைக் கட்டிக்கொள்ளலாம். ஆனால் கடவுள் எண்டு நாங்கள் கும்பிடுற உருவங்கள், சாதாரண மனிதரோடு இருக்கிறேல்லை பாருங்கோ. அவையும் காசுக்காரரோட தானே இருக்கினம். அதால கடவுளுக்கும் மனித புத்தி வந்திட்டுது எண்டு நினைக்கிறன். விசயம் என்னவெண்டா பாருங்கோ, கடவுளை வைச்சு கண்கட்டி வித்தை காட்டுற கூட்டம் இருக்குதல்லோ, அவைக்குத்தான் இப்ப காலம் கண்டியளோ . கல்லுச்சிலைக்குக் கடிகாரம், கண்ணாடி, தொப்பி எல்லாம் போட்டுத்தான் பூசையே நடக்குதெண்டா பாருங்கோவன். அதுவும் கடவுள் எல்லாம் இப்ப நடிகர்கள் கணக்கில நிக்கினை பாருங்கோ. சில இடங்களிலே "தண்ணி" விருந்து கேட்குதாம் சாமி. கோதாரி , என்ன ஆகும்டா இந்தப் பூமி ?

என்ன நான் ஏதோ அவிட்டு விடுறன் எண்டு நினைக்கிறியளே ..? ஐயோ, நான் உண்மை சொல்லியே மாறாத சனம், அவிட்டு விட்டே மாறப்போகுது.? நடந்ததைத் தான் சொல்லுறன் பாருங்கோ. விசயம் என்னவெண்டா பாருங்கோ, சென்னையில

இருந்து யாழ்ப்பாணத்துக்கு விமானம் வந்ததுதான் தாமதம், தமிழ்நாட்டுல நடக்கிற சித்து வேலைகளும் யாழ்ப்பாணத்துக்கு வந்திட்டுது பாருங்கோ. இன்னும் கொஞ்ச நாளில, கையால திருநீறு கொட்டும், வாயால லிங்கம் வரும், இன்னும் எத்தனையோ வரவிருக்கிற சூழ்நிலை நெருங்கீட்டுது பாருங்கோ. அதற்கெல்லாம் உச்ச கட்டமாக என்ன நடந்தது எண்டால், யாழ்ப்பாணத்தில இப்ப புதுசா ஒரு பாபா கோயில் திறந்தது மட்டுமில்லாமல் அந்த பாபாவுக்கு “தண்ணி” விருந்து கொண்டாடினதுதான் பாருங்கோ. என்னடாப்பா நடந்தது எண்டு கேட்டு என்னுடைய ஊர்நண்பருக்குத் தொடர்பெடுத்தன். ஆள் சொன்ன கதையைக் கேட்டால் உது யாழ்ப்பாணம் இல்லை, பாழ்ப்பாணம் ஆகீட்டுது எண்டு தெரிஞ்சுபோச்சு கண்டியளோ.

அந்த பாபாஆலய நிர்வாகி கொஞ்சம் விசேசமா பூசைகள் செய்து மக்களை கோயிலுக்குக் கூட்டிவாறதில விண்ணனாம் கண்டியளோ. அப்பிடித் தான் பூசை ஒண்டிலை பாபாக்கு தயிர், மோர், சாப்பாடுகள் எல்லாம் படைச்சினமாம். பக்கத்தில பாத்தால் ‘பியர்’ உம் படைச்சுக்கிடந்ததாம் பாருங்கோ. உதை அங்கின நிண்ட பெடி ஒருத்தன் படம் எடுத்துக்கொண்டு வந்திட்டான் கண்டியளோ. கோயில் எண்டுற சொல்லுக்கு ஒரு ஆழ்ந்த பொருள் இருக்கு கண்டியளோ. பாடசாலை கூட ஒரு கோயில் தான் பாருங்கோ. ஒரே நல்லெண்ணத்திற்காகப் பலர் கூடுவார்களாயின் அது கோயில் தான் பாருங்கோ. அப்படியான ஒரு வழிபாட்டு இடத்தில மதுபானம் வைக்கிறது சரியான விடயம் இல்லைத்தானே பாருங்கோ. படம் எடுத்துக்கொண்டு வந்த பெடியன் அதை முகநூலில போட்டுப் பரவ விட்டுட்டான் கண்டியளோ. உலகம் முழுக்க உந்த விடயம் போட்டுது.



ஆரோ முகநூலில போட்டுட்டாங்களாம் எண்ட செய்தி ஆலயத்தில மது படைச்சவருக்குத் தெரிஞ்சுபோச்சுக் கண்டியளோ. உடனே அவருக்குச் சாமி வந்துட்டுதாம் பாருங்கோ. சும்மாவே மனிதர்களின்ர மனோநிலை இப்ப அவ்வளவாச் சரியில்லை பாருங்கோ. உதில சாமி வேற வந்து ஆடினால் கேட்கவே வேணும். "முகநூலில படம் போட்டவனின்ர முகவரி ஆறு மணிக்குள்ள எனக்கு வேணும்" எண்டு எம்பிக் குதிச்சு நடனமாட, உடன அவரின்ர சீடப்பிள்ளையள் முகவரியைத் தேடிக் கண்டு பிடிச்சுக் குடுத்திட்டினமாம் பாருங்கோ.

முகவரி கிடைச்ச உடனே, சண்டித்தன சீடப்பிள்ளைகள் எல்லாம் சேர்ந்து, முகநூலில படம் போட்டுக் கதை சொன்ன பெடியன் வீட்டை போய்ப் புகுந்திருக்கினம். அங்க போனால் பெடியன் இல்லை. பெடியனின்ர தாயும் சகோதரிகளும் தான் அங்க நிண்டிருக்கினம் கண்டியளோ. அவையை வீட்டுக்கு வெளியில கூப்பிட்டு, சரமாரியாக விளக்கம் கேட்டிருக்கிறார் பாபா சாமியார். அதுகளுக்கு இருண்டதும் தெரியாது, விடிஞ்சதும் தெரியாது. தெரியாமல்தான் கேக்கிறேன்; பெடியள் வலைத் தளங்களில என்ன எழுதுறாங்கள் எண்டு வீட்டில சொல்லிப்போட்டே எழுதுறாங்கள். முழு முட்டாள் சாமியாக் கிடக்கு பாருங்கோ. தங்களுக்கு இதுகளைப் பற்றி ஒண்டும் தெரியாது எண்டு அதுகள் சொல்ல, சாமியார் முடிஞ்சவரைக்கும் தன்னுடைய




புத்தகம் வெளியிட வேண்டுமா..?




பத்திரிகைப் பணியில் இருபத்து இரண்டு ஆண்டுகளாகப் பல சாதனைகளை நிகழ்த்தி வரும் இனிய நந்தவனத்தின் அடுத்த முயற்சியாக இனிய நந்தவனம் பதிப்பகம் மூலம் பல நல்ல நூல்களையும் பதிப்பித்து வருக்கிறோம். எங்களின் இந்த முயற்சிக்கு வாசகர்கள் மற்றும் எழுத்தாளர்களின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் வரவேற்கிறோம்.
தங்களின் கதை, கவிதை, கட்டுரை, சிறுகதைகளை உலகத்தரத்தில் ISBN எண்களோடு புத்தகமாக உருவாக்கித் தருகிறோம். புத்தக வெளியீட்டு விழா மற்றும் அனைத்துப் பரிசுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான வழிகாட்டுதலையும் செய்து தருகிறோம்.

எழுத்துப் பிரம்மாக்களே!

தொடர்பு கொள்ளுங்கள்

இனிய நந்தவனம் பதிப்பகம்

மின்னஞ்சல் : nandavanam10@gmail.com
இணையதளம் : www.nandavanam.com




மேலதீக விபரங்களுக்கு : +91 94432 84823


செல்வாக்கைச் சொல்லி வெருட்டிப் போட்டுவந்திட்டாராம்.

சாமியார் வீட்டை போய் வெருட்டிப்போட்டுப் போன கையோட, தாய் மனிசி எடுத்து மகனுக்கு உந்த விசயத்தைச் சொல்லிப்போட்டுது கண்டியளோ. வீட்டை போய் வெருட்டினதாம் எண்டு கேள்விப்பட்ட உடன பெடியனுக்கு எள்ளும் கொள்ளும் வெடிக்க ஆரம்பிச்சிட்டுது பாருங்கோ. அவன் என்ன செய்துவிட்டான் தெரியுமே,? நடந்த விசயம் எல்லாத்தையும் திருப்பவும் எழுதி முகநூலில போட்டுவிட்டுட்டான் பாருங்கோ. சாமியார் வீட்டை வந்து வெருட்டினது தொடக்கம், எல்லாம் எழுதிப்போட ஒரே அல்லோல கல்லோலம் பாருங்கோ.

அதுக்குள்ளே பாபா சாமியார் ஒரு அறிக்கையைத் தயார் செய்து வெளியிட்டார் பாருங்கோ. அதாவது; “இனிமேல் மதுபானம் படைக்கப் பட்டாலும், சிறுவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம் படைக்கப் படும்” எண்டுறதுதான் அந்த அறிவித்தல் கண்டியளோ. உந்தச் சாமிக்கு பச்சை மட்டை உரிய உரிய வெளுக்கவேணும். அதென்ன கூந்தலுக்கு சிறுவர்களுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம்..? எனக்கு விளங்கேல்லை பாருங்கோ. ஆலயத்திலே கட்டாயம் மது படைக்க வேணும் எண்டு விதி இருக்குதோ சொல்லுங்கோ பாப்பம். எங்க இருந்தடா உந்தப் புதுவிதி எல்லாம் கொண்டுவரியள் எண்டு தெரியேல்லை.

அதுக்குள்ள பாருங்கோ, சாமியார் விளக்கீட்டுக்கு ஒரு விளக்கு வைக்க பத்து ரூபா வாங்கினது தொடக்கம், தேர்செய்ய பத்து இலட்சம் வாங்கினது வரை பெடியள் முகநூலில போட்டு வெளுக்கத் தொடங்கீட்டாங்களாம். சாமியாருக்கு என்ன செய்யுறதெண்டே தெரியேல்லை. ஓடினார் ஓடினார் உலகின் எல்லைக்கே

ஓடினார். ஆட்களை வைச்சு யாரையும் வெருட்டலாம் எண்டாலும், பிறகு அதைக் கேள்விப்பட்டால் கோயில் பிழைப்பில மண்விழுந்திடும் எண்டும் அவருக்குத் தெரியும். அதால ஒரே வழி, அந்தப் பெடியன் வீட்டாரின் காலில விழுகிறதுதான் என்ற முடிவுக்கு வந்திட்டார்.

இப்படியான இணைய வலைத்தளச் செய்திகளால தனக்கு மனநலம் குன்றிவிட்டதாகவும், தயவுசெய்து இவற்றை இடைநிறுத்து மாறும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பெடியன் எல்லாச் செய்திகளையும் முகநூலால அழிச்சுப்போட்டுது பாருங்கோ. அந்த இடைவெளிக்குள்ள சைவ மகாசபை குறுக்கால மறுக்கால ஓடி ஒரு அறிக்கை விட்டதாகக் கேள்வி. வடநாட்டு பாபாவுக்கும், தென்னாடுடைய சைவத்துக்கும் என்னடா சம்பந்தம் எண்டு தலைமயிரைப் பிச்சுக்கூட யோசிச்சுப் பாத்தன். ஒண்டுமா விளங்கேல்லை கண்டியளோ.

மக்கள் வழிபடக் கூடுற இடங்களில ஒழுக்கமும், நேர்மையும் இருக்கவேணும். இரண்டும் இல்லாமல் செய்யுறது எல்லாமே வியாபாரம்தான் கண்டியளோ. உப்பிடியான விடயங்களில எந்தச் சாமி ஈடுபட்டாலும் அது கண்டிக்கப்பட வேண்டியதுதான் பாருங்கோ.

**இருக்கிறதெல்லாம்**
**பொதுவாய்ப் போனால்**
**பதுக்கிற வேலையும் இருக்காது**
**பொறுக்கிற வேலையும் இருக்காது....**
**உழைக்கிற நோக்கம்**
**உறுதியாயிட்டால்**
**கெடுக்கிற நோக்கம் வளராது .....**
**மனம் கீழும் மேலும் புரளாது**

**- அப்ப வரட்டே**


**Dortmund மாநகரில்....**

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33**
**0231 950 979 00**


ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி
அகரம்
ஜெர்மனி
ஐரோப்பிய தமிழ் வானொலி & அகரம் வழங்கும்
தேன்
மதுரமாலை
நாள்
15
பிப்ரவரி
2020
நேரம்
14.59
இடம்
Helmholtz-Gymnasium
Münsterstraße 122
44145 Dortmund
மேலதீக விபரங்களுக்கு... www.etr.fm



பாகம் 92

அன்புச் செல்வன்

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

## இன்னுமா தனித் தமிழ் ஈழம் பற்றித் தமிழர்கள் பேச முடியும்?

பறிக்கப்பட்ட தனித் தமிழ் ஈழத்தை மீளக் கையகப்படுத்தும் வரை ஈழம் பற்றித் தமிழ் இனம் பேச வேண்டும் அதற்கான போராட்டைத் தொடர வேண்டும் தொடரும். வெற்றி கொண்டவன் வெற்றியைக் கொண்டாடும் வரை எமது நிலங்களை வைத்திருக்கும் வரை எமது பேராட்டம் இருக்கும்.

இது பௌத்த ஆரிய சிங்கள கொடுங்கோலாட்சியின் முழுமை வடிவமாக இலங்கையின புதிய அரச அதிபராக தெரிவான கோட்ட பாயா ராஜபக்ஷ தமது ஆட்சியின் முக்கிய பிரமுகர்களுடன் நடத்திய முதல் சந்திப்பு தொடர்பான படம். கோட்ட பாயாவின் மீள் வரவு ஆரிய பவுத்த சிங்களத்தின் ஆதிக்க ஆட்சியின் எழுச்சி. உலகில் தமிழினத்தின் வரலாற்றை ஆணி வேரோடும் வேரடி மண்ணோடும் உலக வரலாற்றில் புடுங்கி அழித்துவிடும் தொடக்கப் புள்ளி.

தமிழகத்தில் கீழடியின் அகழாய்வு முடிவுகள் ஆரிய இனத்தின் முன்னுரிமை தொடர்பான அனைத்து கோரிக்கைகளையும் அடியோடு தகர்துவிடும் அளவுக்கு ஆரிய இனத்தின் வரலாறு மாற்றம் கண்ட விட்டது. அதனால் கீழடி ஆய்வுகளை அமுக்கி விட எத்தனித்த இந்திய மத்திய அரசை கையில் வைத்திருக்கும் ஆரிய ஆளும் வர்க்கம் கரியானாவில் ராகிக்கடியில் கிடைத்த அகழாய்வின் முடிவுகளில் எடுக்கப்பட்ட மரபணு ஆய்வில் அங்கு கிடைத்த 4500 ஆண்டுகள் பழமையான மனித எச்சங்கள் தென்னிந்திய பழங்குடியினருடன் அதிகம் ஒத்திருப்பது உறுதிப்படுத்தப் பட்டதால் கீழடி ஆய்வுகளை அமுக்க முடியாத படிக்கு அங்குள்ள மக்களின் எழுச்சி வெற்றி பெற்றதால் ஈழத் தமிழரின் வரலாற்றை எப்படியும் அழித்துவிடச் சிங்களமும் இந்திய அரசும் முழு மூச்சுடன் செயற்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

ஏற்கனவே தமிழரின் வரலாற்றுத் தடயங்களை அழித்தும் அவற்றை புத்தமத தடயங்களாக மாற்றியும் சிங்களம் இலங்கைத் தீவை தனக்கே உரியது என


வாடிக்கையாளர்களின் பேராதரவுடன்
17ஆம் ஆண்டில்....
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
மங்கையர் மனதை
கொள்ளைக் கொள்ளும்
பட்டுச் சேலைகள் யுற்றொப்ஸ், சிமோக்,
லேஸ், நெற்ஸ், லேசர் ரிசு சேலைகள்,
அனார்கலி பட்டியாலா பஞ்சாபிகள்,
பாவாடைத் தாவணிகள்,
காகிறாச் சோலிகளுடன்
ஆடவர்கள், சிறுவர், சிறுமியர்களுக்கான
ரெடிமேட் ஆடைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்
யாரும் கண்டிராத
மலிவு விலையில்
இந்த வருடத்தின் புத்தாடைகள்
வாங்கிட எம்மை நாடவும்...
மாபெரும்
ராஜ
முத்திரை
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்
ADLER STR. 33, 44137 DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648




வரலாற்றைத் திரித்தும், புகுத்தியும் வரும் நிலையில் கிட்லர் முசோலினி இடி அமீன் பொல்பொட் போன்றவர்களின் வரிசையில் இடம் பெற அனைத்து தகுதிகளையும் காண்டிருக்கிற கோட்டபாயா ஜனாதிபதியாக தெரிவாகி உள்ளமை தமிழீழ தாயக கோட்பாட்டை அழிக்கத் தேவையான அனைத்து வேலைகளையும் தயவு தாட்சண்யமின்றி நிறைவேற்ற எல்லா இடங்களிலும் முப்படைகளின் பலத்தையும் பயன்படுத்தப் போவது உறுதி.

போரின் பொழுது தமிழ் தேசிய உணர்வாளர்களான யோசப் பர்ரராஜசிங்கம். குமார் பொன்னம்பலம். ரவிராஜ். தராகி சிவராம் உட்படபடப் பல ஊடகவாளர்களை உண்மைகளைப் பேச முற்பட்ட சிங்களவர்களான லசந்த விக்கிரமதுங்க மற்றும் எக்னெலிகொட போன்றவர்களையும் இன்னும் அறியப்படாத வெள்ளை வான் கடத்தல் படுகொலைகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டியவரான கோட்ட பாய ராஜபக்ஷ இன்று சர்வ அதிகாரமும் கொண்டவராக நாட்டின் அதிபராகத் தெரிவாகி உள்ளமை குறிப்பாக ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகவும் ஆபத்தான நிலையாக பார்க்கப்படவேண்டி இருக்கிறது. ஆனால் தமிழர் தலைமைகள் அப்படியாகப் பார்க்கின்றனவா என்பதே சந்தேகம்தான்.

அண்மையில் வடமராட்சியில் இடம் பெற்ற அரசியல் கருத்தரங்கு என்கிற போர்வையில் இடம் பெற்ற த.வி.கூ. பிரச்சாரக் கூட்டத்தில் லிக்கோரியார் ஆலய பங்குத் தந்தை றெக்ஸ் சவுந்தரா பேசியவற்றின் சில வரிகளை கவனத்தில் எடுப்பது அவசியமாகத் தெரிகிறது.' ஏன் இன்று இந்த அரசியல் அரங்கு? ஏன் இன்று இந்த மக்கள் மனம் அறியும் அரசியல் கருத்தரங்கு உங்களுக்கு? எங்கள் மனங்களை அறிய உங்களுக்கு என்ன தேவை இருக்கிறது? என்ன உரிமை இருக்கிறது? நீங்கள் யார் உளவியல் ஆற்றுப் படுத்துகிறவராக இருந்தால் எங்கள் கதைகளைக் கேட்கலாம். அல்லது இன்றைய அரசியலின் பொது மக்களின் கருத்துக்கள் உங்களுக்குத் தெரியாதா?

நன்றாக உங்களுக்குத் தெரியும். இவ்வளவு காலமாக திரும்பிப் பார்க்காத மக்களை இன்று திருப்பிப் பார்க்க காரணம்

என்ன? எனது பார்வையில் இந்த மனமறியும் அரசியல் களம் என்பது எதிர்வரும் தேர்தலுக்காக வாக்கு கேட்க வருவதற்காக நாடி பிடித்து வேவு பார்க்கும் வேலை இது. அல்லது மாற்றுத் தலைமை ஒன்று உருவாகி வருகிறது அதற்கு ஈடு கொடுத்து உங்கள் தலைமையைத் தக்க வைப்பதற்காக மேற் கொள்ளப்படும் ஒரு நகரவு இது. அல்லது தோற்றுப் போகின்ற உங்கள் அரசியல் நகர்வுகளை நியாயப்படுத்துவதற்கான ஒரு அரசியல் களம் இது?.....

இன்று தமிழ் மக்களாகிய எங்களுக்கு ஒரு சமயத் தலைவரோ சமூகத் தலைவரோ. அரசியல் தலைவரோ இல்லாத வெறுமையைப் பார்க்கின்றோம். இருக்கின்ற தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்களுள் பெரும்பான்மையினர் நேர்மையில்லாதவர்களாக சுத்துமாத்துப் பண்ணுகிறவர்களாக தெற்கில் ஒரு கதை. வடக்கில் ஒரு கதை சொல்லுகிறவர்கள். வெளிப்படைத் தன்மையில்லை.

அதனாலே உண்மைத் தன்மையைக் காணமுடியாதுள்ளது. நீண்ட நோக்கற்றவர்கள். உங்களது இந்தச் செயற்பாட்டாலே தமிழ் மக்கள் அடைந்த நன்மை என்ன ? இல்லை நீங்கள்தான் அடைந்த நன்மை என்ன? பதவி இழந்த பிரதமர் மீண்டும் தம் பதவியைப் பெற்றுக் கொண்டார். பதவி ஏறி பதவி இழந்த மகிந்தவிற்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவி கிடைத்தது. வில்லங்கமாக மூக்கை நுழைத்துக் கொண்ட உங்களுக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவிதான் பறி போனது.'

அடுத்து இந்தியப் பத்திரிகை ஒன்றில் இழத் தமிழர் விவகாரத்தை இந்திய ஊடகங்கள் கையாளும் விதம் பற்றிய கருத்து எம்மைப் பொறுத்த வரை ஈழத் தமிழரின் ஊடகங்களே மாற்றாந்தாய் அணுகு முறையில் கையாள்வதைக் காணும் பொழுது குறித்த பத்திரிகை சொல்வதை எமது வாசகரின் கவளத்துக்காக இங்கே தருகிறோம்;-

மிகச் சமீபத்தில் நடந்து வருகிற ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமைப் போரைப் பற்றிக் கூட சிதைத்து, திரித்துத்தான் செய்திகளை வெளியிடுகின்றன ஆளும் வர்க்க குழலூதிகளான செய்தி ஏடுகள். அடுத்த தலைமுறைக்கு இது தான் வரலாறு என்று சொல்லப்படும்.




இப்படியான வரலாற்று உண்மைகள் திட்டமிட்டு மறைக்கப்படும் நிலையில் கடந்த 10 ஆண்டுகளாக அரசியல் நடத்திய எமது தலைவர்களின் யோக்கியதை பற்றி இக்கட்டுரையில் லிக்கோரியார் தேவாலய பங்குத் தந்தை றெக்ஸ் சவுந்தரா பேசிய ஒவ்வொரு சொல்லும் களநிலவரத்தை நன்கு பிரதிபலிப்பதால் அவற்றைத் தந்திருக்கிறோம்.

நமது நாடும் மக்களும் ஒரு மீளமுடியாத அவலத்தை மிகக் கொடூரமான ஆட்சியாளன் கோட்டபாயாவின் காலடிகளில் கழிக்க வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டுள்ளனர். நமது தாய் மண்ணும் மக்களும் இப்படியான நிலையில் காலவரையறை அற்றுக் கழிக்கும் பொழுது தமிழ் இனத்தின் வரலாற்றை காலம் தாழ்த்தாமல் மீட்டெடுக்கும் வேலையில் உலகத் தமிழர் சமூகம் இறங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

13வது திருத்தச் சட்டம் என்கிற மாய மானைக் காட்டி அரசு நோக்கிய தமிழீழ அரசை அழித்து வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையை நிறுவ அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் இதோ வருகிறது அதோ வருகிறது எனத் தமிழ் மக்கள் மனதில் ஆசை காட்டி இறுதியில் எமாற்றமே முடிவு என ஆகி விட்ட நிலையில் எம் இனம் என்ன செய்யப் போகிறது?

சிங்களத்தின் அரசியல் தலைவர்கள் எல்லாரும் 13வது திருத்தச் சட்டமோ காணிகள் காவல்துறை அதிகாரமோ வடக்கு கிழக்கு இணைப்போ கடைசிவரை வழங்கப் போவதில்லை எனத் திட்டவட்டமாக அறிவித்து விட்ட பின்னரும் கூட தமிழருக்குப் பாராளுமன்றத் தேர்தலும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும் என்ன பயன் தர முடியும்? இப்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தால் பௌத்த சிங்களவரல்லாத மக்களுக்கு என்ன நன்மை? எதற்காக தமிழினம் கட்டுப்படவேண்டும்?

தமிழ் மக்களுக்கான தீர்வை சிங்களமும் தராது அதன் அரசமைப்புச் சட்டமும் வழங்காது. இப்படியான நிலையில் சர்வ தேச சட்டங்களின் அடிப்படையில் போர்க் குற்ற மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் தொடர்பான சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து நீதியைப் பெறுவதும் ஐ.நா. விதிகளின் கீழ் தமிழ் மக்களின் கருத்துக் கணிப்பின் மூலம் தனித் தமிழ் ஈழத்தைப் பெறுவதுமே எமக்கு எஞ்சி உள்ள ஒரே வழி.

எமக்கான உரிமைகளைச் சிங்களமோ சிங்களத்தின் சட்டங்களோ தரப்போவதில்லை என்பதை உலகறியச் செய்து சர்வதேச சட்ட்ங்களின் கீழ் தனித் தமிழீழம் காண்போம்.




A K M A M

Alpenstr.1, 3072 Ostermundigen
Tel. 031 9312525 (Bern Nilavani)
Basel Str. 80, 6003 Luzern
Tel. 041 2405400

## மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம்..!

**தமிழனின் வரலாற்றில்**
**மாபெரும் புரட்சி**

இதய பூமியாம்
கிளிநொச்சியை மையமாகக் கொண்டு
தமிழரின் உழைப்பில் உற்பத்தியானது










உங்கள்
இனத்துக்கு உதவிய
திருப்தியுடன்
வாங்கிச்
செல்லுங்கள்!



## இனிய தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்

A K M A M

முத்திரை பதித்த
அனைத்துப் பொருட்களையும்
ஒருமுறைச் சுவைத்தால்
ஈழத்துச் சுவை உங்கள் நாவில்
ஆழமான தனிச் சுவை தரும்..!

கிளிநொச்சி / முல்லைத் தீவு / யாழ்
மன்னார் மாவட்டங்களில் இருந்து
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளிலும்
ஒரு தமிழனின் துயர் துடைக்கும்

“விலை அல்ல எம் வாழ்வில் மகிழ்வைத் தருவது
தரம் மட்டுமே! நல் வாழ்வைத் தரும்

AKM Mani Face book page : AKM



**GENERALI**


## Mathan Selvaratnam
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern

058 473 24 45 058 473 32 29

email : mathan.selvaratnam@generali.com

www.generali.ch


www.generali.ch 076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

### வருமானக்காப்புறுதி
**EINKOMMENS - VERSICHERUNGEN**

வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

### சேமிப்புக்காப்புறுதி
**SPARVERSICHERUNGEN**

சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

### ஆயுட்காப்புறுதி
**LEBENSVERSICHERUNGEN**

உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

### வாகனக்காப்புறுதி
**FAHRZEUGEVERSICHERUNGEN**

உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

### வீட்டுக்காப்புறுதி
**HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN**

சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

### சட்டக்காப்புறுதி
**RECHTSSCHUTZVERSICHERUNG**

ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

### மருத்துவக்காப்புறுதி
**KRANKEN & UNFALLVERSICHRUNGEN**

அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி

### வீட்டுக்கடன்
**HYPOTHEKEN**

உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை



எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்

சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்

பகுதி.26

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

அவதானி



உளவு நிறுவனங்கள் தமது நாட்டின் தொடர்பற்ற நிலையில் இயங்குபவை அல்ல. அவை தனித்துவமான ஒரு நிறுவனமாக இயங்குமேயன்றி தமது நாட்டின் இராஜ தந்திரிகளின் ஆலோசனைப்படியும், அறிவுரைக்கமையவுமே இயங்குபவை.

வளர்ந்த நாடுகள், வளர்முக நாடுகள், வறிய நாடுகள் என அனைத்து நாடுகளையும் அந்தந்த நாடுகளுடைய நிர்வாகக் கட்டமைப்பைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் பொருளாதார மூலகங்கள் ***(Economic elements)*** எதுவென கண்டறிகின்றன. அவற்றைச் சிதைப்பதன் மூலமோ அன்றி, அவற்றைத் தனதாக்கிக் கொள்வதன் மூலமோ ஒரு குறிப்பிட்ட நாட்டின் நிர்வாகத்தை சிதைக்க முடியும் என்பது ஆய்ந்தறிந்து உண்மையாகும்

ஏன் உளவு நிறுவனங்கள் மற்றைய நாடுகளின் நிர்வாகக் கட்டுமானங்களை சிதைப்பதற்காகச் செயல்படுகின்றன? என்ற கேள்வி எழும் போது, ஒவ்வொரு சமகாலத்திலும் உலக நாடுகள் தம்மை வளர்த்துக் கொள்ள எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் பல்வேறு வகைப்பட்டனவாக இருக்கின்றன.

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் மன்னர் காலத்திலிருந்து, இன்றுவரை உளவு பார்த்தல் என்பது ஒரு அரச பணியாகவே இருந்திருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டிருந்தேன். தனது மக்களின் மகிழ்ச்சியே தமது அரசின் உச்ச நிலைப்பாடெனக் கொண்டிருக்கும் நாடுகள்கூட, மற்றைய நாடுகளை உளவு பார்க்கின்றன என்பதை மறுக்க முடியாது.

ஒவ்வொரு சமனாலத்திலும் அந்தந்த நாடுகள் தமது நிர்வாகத்தை நடத்த எடுத்துக் கொள்ளும் பொருளாதார மூலக்கூறுகள் பல்வேறு பட்டவையாகவே இருக்கும்.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தை கீழ்வருபனவையாகக் கண்டறிந்து கொள்ளலாம். ஏற்றுமதி, இறக்குமதி சாராது ஒரு நாட்டினுடைய மண், நீர் நிலைகள், கனிம வளங்கள் சார்ந்த பொருளாதார ஆதாரங்கள ***(Economic sources)*** மூலமாகவும், அவற்றைச் சரியான முறையில் கையாளுதல் வழியாகவுமே ஒரு நாடு தனது குடிமக்களை நிர்வாகிப்பதற்கான கட்டமைப்பாகச் செயல்படுகின்றது.

பொருளாதாரத்திற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லாத போது, அந்நாடுகள் தமது நாட்டு மக்களுக்கான அன்றாட வாழ்வியலுக்குத் தேதவையான நுகர்வுப் பொருட்களை இறக்குமதி



செய்கின்ற நிர்பந்த நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

தொழிற்சாலைகள் பல இயங்கி உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்தும், ஏற்றுமதி செய்கின்ற பொருளாதார வளர்ச்சி ஏற்படும் போது உளவு நிறுவனங்கள் தொழிற்சாலைகள் மிது கவனம் செலுத்தத் தொடங்கிவிடும்.

ஒரு நாட்டினுடைய தொழிற்சாலைகள் என்பனவும், அந்நாட்டின் தொழில்துறை பொருளாதார ஆதாரங்களாகும் ***(Industrial economic sources).***

இவற்றினைச் சிதைப்பதற்காகவே உளவு நிறுவனங்கள் செயல்படுகின்றன. இந்தச் சிதைவுச் செயல்பாடுகளை செய்வதற்கு அந்நாட்டில் இயங்குகின்ற, உளவு நிறுவன நாடுகளின் தூதரகங்கள் மூலவேராக இருக்கின்றன என்பதை நிராகரிக்க முடியாது.

ஒரு நாட்டினுடைய இராசந்திர உறவுகள், பொருளாதார உறவுகள் என இன்னோரென்ன உறவுகளை இயல்பாக தூதரகங்கள் பேணுகின்ற அதேவேளை, அந்த நாட்டின்; வளர்ச்சியையும் கண்காணித்துக் கொண்டேயிருக்கும்.

அந்தக் கண்காணிப்பின் ஒரு வேலைத்திட்டமே, தொழிற்சாலைகளுக்கு எதிராக இடம்பெறும் தொழிலாளர்களின் போராட்டங்களாகும்.

தொழிலாளர்களின் பணிக்குச் செல்லாத பணிமறுப்பு போராட்டங்கள் காரணமாக உற்பத்திகள் நடைபெறாத பட்சத்தில், ஒரு தொழிற்சாலையிலிருந்து பொருட்களின் தேவை மக்களுக்கு தேவையான அளவு கிடைக்காத போது, மக்கள் அரசு மீதுதான் அதிருப்தியடைவார்கள்.

சமாந்தரமாக பற்றாக்குறையை தமக்குச் சாதமாக பயன்படுத்தி, தொழிற் சாலை தொடங்கி சந்தைதப்படுத்துவோர், மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் வரை விலைகளை ஏற்றுவார்கள்.

ஒரு மனிதனின் வருமானத்திற்கு மிதமாக அவன் அதிக விலை கொடுத்து பொருட்களை வாங்க வேண்டிய நிலைக்கு அவன் தள்ளப்படுகின்ற, பணிமறுப்பு





LIMRA
BAGS
Pvt. Ltd.,
Chairman
SADIK BASHA.M
Online Shopping : www. limramart.com
No.14, Pensioner Street, Thennur,
Trichy - 620 017. Tamilnadu, India.
Touch with us : 0431 - 4346053,
Mob : +91 97861 14635.
domesticlimra@gmail.com
www.limrabags.in
COMING
SOON
CANADA

போராட்டத்திற்கு எதிரானதாகவும், சார்பானதாகவும் கருத்துகள், விமர்சனங்கள் பொது மக்களிடமிருந்து வெளிப்பட்டாலும், ஒட்டமொத்தத் திரட்சியாக அனைத்துக் கோபங்களையும் அரசின் மீதே ஒரு சராசரி மனிதன் கொள்வான்.

தொழிற்சாலைகளின் நிர்வாகத்திற்கும், தூதரகங்களின் அவர்களுடனான இரகசியத் தொடர்பைக் கண்டறிவது என்பது சுலபமான விடயமல்ல. ஒரு விவேகமும், நுட்பமும் கொண்ட அரசு தூதரகங்கள் மீது சந்தேகம் கொண்டிருந்த போதும் எடுத்தோம், கவிழ்த்தோம் என தமது நாட்டுக்கும், தூதரகத்தின் நாட்டுக்குமிடையிலான இராசதந்திர உறவில் விரிசல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக, மிகவும் புத்திசாலித்தனத்துடன் செயல்பட வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

தொழிற்சாலைகள், தொழிலாளர் சங்கங்கள் போன்றவற்றில் தூதரகங்களின் உளவு நிறுவனங்கள் கொண்டுள்ள தொடர்புகள் மிகவும் முக்கியமானவை.

தொழிற்சாலைகளையும் தொழிலாளர் சங்கங்களையும் கையாளுவதற்கு தூதரங்கள் தாம் தொடர்புபட்டவர்களாக காட்டிக் கொள்ளாது. தமக்கும் உளவு நிறுவனங்களுக்கும் எவ்வித தொடர்புமே இல்லை என்பதை மிகவும் நுட்பமாக கட்டமைத்திருக்கும்.

இக்கட்டுரை ஆரம்பிக்கும் போது உளவு நிறுவனங்கள் பணம், பெண், பொருளாதாரம் ஆகியவற்றை பயன்படுத்தியே இரகசியங்களை அறிந்து கொள்கின்றன என்பதைக் குறிப்பிட்டிருந்தேன்.

எந்தெந்த நாட்டுக்கு, எந்தெந்த அணுகுமுறை உகந்தது? என்பதைக் கண்டறிவதும், அவை கண்டங்கள் சார்ந்த நாடுகளுக்கு வேறு வேறாகவும் இருக்கும்.

ஒரு நாட்டினுடைய ஏற்றுமதியைச் சிதைக்கும் போராட்ட வன்முறை, பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

**(தொடரும்)**





IMPORTAS
Cash & Carry
தாயக உணவு வகைகள் உட்பட அனைத்து உணவு
வகைகளையும் உயர் தரத்தில் மிக மலிவாகவும்
நீங்கள் நம்பிக்கையோடு நாட வேண்டிய ஒரே இடம்...
பேர்ண் நகரில்
புதிய உதயம்
வாடிக்கையாளர்களின் ஏகோபித்த
வேண்டுகோளுக்கிணங்க 30 வருடங்களாக
தமிழர்களின் அபிமானம் வென்ற
"இம்போட்தாஸ்" நிறுவனம் பேர்ண் மாநகரில்
தனது கிளையை திறந்து வைக்கின்றது
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய பொங்கல்
நல்வாழ்த்துகள்
Kranichweg 8, 3074
Muri Bei Bern
☎ 031 951 24 44
Subash
Rubicon
RENUTE
PG tips
PATAK'S
Niru
Nestlé
Maggi
Kings
Gits
ELAKKIA
TRS
Thai Pride
SURYAA
Baslerstrasse 102, 8048 Zürich - Switzerland
Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56
email : info@importas.ch Web : www.importas.ch

# வெளிநாட்டு மருமகளின்! உள்நாட்டுப் பொங்கல்

சிறுகதை

**வண்ணை தெய்வம்**

"அப்பா இன்னமும் கோபமா இருக்கிற மாதிரித்தான் தெரியுது...."

"............................"

"சரி சரி எத்தினை நாளைக்கு இந்தக் கோபம் எண்டு பாப்பம்?"

"..........................................."

"இப்ப என்ன பத்து மணிதானே ஆகுது! உங்கப்பா புத்தகம் படிச்சுக் கொண்டிருக்கிறார். நான் இன்னும் ரண்டு சீரியல் பாத்திட்டுத்தான் படுக்கப்போவன். நீ கொஞ்சம் பொறுத்து எடு." எனச் சொல்லி ரெலிபோனை வைத்துவிட்டு எழுந்து வந்து, புருசன் படுத்திருந்த அறையை எட்டிப் பார்த்தாள் செல்லம்மாள். சுவர்ப் பக்கமாக திரும்பிப் படுத்துக் கொண்டிருந்தார் கணவர் ராகவன். செல்லம்மாளுக்குத் தெரியும் இவ்வளவு நேரமும் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு இப்பத்தான் படுக்கையில் படுத்திருக்கிறார் என்று.

"என்னங்க குழந்தை போன் பண்ணியிருந்தான்."

ராகவன் தூங்கிய மாதிரியே படுத்திருந்தார்.

"எனக்குத் தெரியும் நீங்க முழிப்புத்தானெண்டு! திரும்பி என்னெண்டு கேளுங்கோவன்"

தான் தூங்கவில்லையென்பதை மனைவி தெரிந்து கொண்ட கோபத்துடன் வேகமாகத் திரும்பியவர் "குழந்தையா? ஆரடி? உன் பிள்ளை குழந்தையா?"

"அதென்ன உன் பிள்ளையா? என்ன எனக்கும் சூரியபகவானுக்குமா பிறந்தான்? நீங்கதானே குழந்தை ராஜா,ண்ணு பேர் வைச்சீங்க."

"சரி சரி தெரியாம வைச்சிட்டன்! தான் இப்ப குழந்தை இல்லையென்கிறதை செயல்லை காட்டேற்ரானில்லை! பேந்தேன் இஞ்சை ரெலிபோன் எடுக்கிறார்?."

"குழந்தை எண்டு பேர் வைச்சா நெடுகலும் குழந்தையே? அவனுக்கு இப்ப இருபத்தெட்டு வயசாகுது!"

"வயசு வந்திட்டா தான் விரும்பினபடி கலியாணம் செய்வாராமோ?"

"நீங்கள் பாத்துக் கலியாணம் செய்யிறதெண்டா உங்களுக்குப் பக்கத்திலை எல்லோ வச்சிருக்க வேணும். ஏன் வெளிநாட்டுக்கு அனுப்பினனீங்கள்? வயசுக் கோளாறு லவ் பண்ணீட்டான். லவ் பண்ணிக் கலியாணம் முடிச்சா பிள்ளை இல்லையெண்டாகிடுமோ?"

இப்பொழுது ராகவன் எதுவும் பேசவில்லை. குழந்தை ராஜா அவர்களுக்கு ஒரே மகன். ஊரில் படித்து நல்ல வேலையில் இருந்தவனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்ததே ராகவன்தான்.

தனது மகனும் ஐரோப்பிய நாட்டில் வாழ்கிறான் என்று பெருமையாகச் சொல்லித் திரிந்தவருக்கு நாலு மாசத்துக்கு முன்னம் மகன் வெள்ளைக்காரப் பொம்பிளையை கலியாணம் முடிச்சிட்டான் எண்டு கேள்விப்பட்டதிலை இருந்து இப்படித்தான். ஒரு வறட்டுப் பிடிவாதம்.



மகனுடன் கதைப்பதில்லை. ஆனால் தாயுடன் மகன் கதைப்பதை இரகசியமாக ஒட்டுக்கேட்டுக் கொள்வார்.

“நத்தார், பொங்கல் எல்லாம் வருகுது. கலியாணம் முடிச்ச முதல் நத்தாராம் மருமோளுக்கு.... வெள்ளைக்காரப் பொம்பிளையை முடிச்சாலும் அவன் எங்கடை பிள்ளைதானே? பொங்கல் கொண்டாட வேணுமாம்....” வார்த்தையை முடிக்காமல் மென்று முழுங்கினாள் செல்லம்மாள்.

“அதுக்கு....?”

“இந்த வருசம் பொங்கல் கொண்டாட எங்கள் ரண்டு பேரையும் பிரான்சுக்கு வரட்டாம்!”

“போடி போக்கத்தவளே! பிரெஞ்சுக்காரிக்கு நீ போய் பொங்கிக் காட்டப் போறாயாக்கும்!”

“நத்தார் கொண்டாட்டத்தை மருமோள் கொண்டாடேக்கை எங்க புள்ளையும் பொங்கலைக் கொண்டாடட்டும்!”

“நல்லாக் கொண்டாடட்டும்!”

“அவனுக்கு பொங்கலைப்பத்தி என்ன தெரியும்?”

“அதுக்கு....?”

“ஏதோ ஆசைப்பட்டுக் கல்யாணம் செய்திட்டான். இனி என்ன செய்யிறது நாங்களும் கொஞ்சம் பொறுத்துதான் போவேணும்!”

“பொறுத்து எங்கையடி போறது?”

“அதுதான் தங்களிட்டை வரச்சொல்லி ஆசையாக் கூப்பிடுறான். நீங்களும் அதுக்குத்தானே ஆசைப்பட்டனீங்கள்!”


அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11


ராகவன் ஆசைப்பட்டது உண்மைதான். பக்கத்து அயலிலை இருக்கிற பரஞ்சோதீன்ரை மகன் படிச்சதென்னவோ எஸ்.எஸ்.சிதான். ஆனால் அவன் பிரான்ஸ்சுக்குப் போய் அந்த நாட்டுச் சிற்றிசென்னும் எடுத்து தாய் தேப்பனையெல்லாம் அங்கை கூப்பிட்டிட்டான்! அதைக் கேள்விப்பட்டதுக்குப் பின்னாலைதான் ராகவனும் மகனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைச்சவர்.

மனதிற்குள் ஆசை இருந்தாலும் உடனடியாக ஒத்துக்கொள்ள மனம் விடவில்லை. “எனக்கொண்டும் ஆசையில்லை. நீ வேணுமெண்டாப் போய் பிரான்ஸிலை பொங்கு நான் இஞ்சை தனியா இருந்து பொங்கிச் சாப்பிடுறன்”.

“உங்களுக்கு சுடுதண்ணி வைக்கக்கூடத் தெரியாது! என்னெண்டு சமைப்பியள்?”

“நீ என்னோடை கதைச்ச நேரத்திலை ரிவிலை ஒரு நாடகம் முடிஞ்சிருக்கும் போய் மற்ற நாடகத்தையெண்டாலும் பார்” என்று சொல்லிவிட்டு மீண்டும் சுவர்ப்பக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டார் ராகவன்.


THOOYA COMMUNICATION




Lyca TV BOX எம்மிடம் கிடைக்கும்

Rheinische Str 80
44137 Dortmund

செல்லம்மாளுக்குப் புரிந்தது கணவருக்கு இப்பொழுது மகனிடம் கோபம் இல்லை. ஆனால் ஈகோ இடம் கொடுக்குதில்லை என்று. இனி இருவரும் நேரடியாகக் கதைத்தால்த்தான் எல்லாம் சுமூகமாக முடியும் என நினைத்தவள் இப்பொழுது பிரான்ஸில் இருந்து மகன் குழந்தை எடுக்கும் ரெலிபோனை கணவனே எடுத்தக் கதைப்பதற்கு வசதியாக தனது ரெலியோனை கணவனின் தலைமாட்டிற்கு அருகில் வைத்துவிட்டு நாடகம் பார்க்கச் சென்றுவிட்டாள்.

ராகவன் கண் அயர்ந்து போன நேரத்தில் ரெலிபோன் மணி காதுக்குள் ஒலிக்க திடுக்கிட்டு எழுந்து போனை எடுத்துவிட்டார்.

மறுமுனையில் மகன் குழந்தை ராஜாதான். “அப்பா...”

.................

“அப்பா ப்ளீஸ் என்னை மன்னிச்சிடுங்கப்பா!”

மகனின் குரலைக் கேட்டதும் சட்டென உடைந்துவிட்டார் ராகவன். சரி சரி விடுடா! வெள்ளைக்காரப் பொண்ணை முடிச்சதிலை ஏதோ கொஞ்சம் வருத்தம். வாழப்போறது நீதானை. சந்தோசமா வாழ்ந்தால் எங்களுக்கும் சந்தோசம்தான்.”

“அப்பா நீங்க என்னோடை கதைச்சதே எனக்கு பெரிய சந்தோசம்.” குழந்தை ராஜா சந்தோசத்தில் ஏதேதோவெல்லாம் கதைத்தான்.

“சரி சொல்லப்பா கல்யாண வாழ்க்கை எப்பிடிப் போகுது?”

“அப்பா பொங்கலுக்கு இன்னும் ஒரு மாசம்தான் இருக்கு. மனிசி கிறிஸ்ற்ரியன். நத்தார் கொண்டாட்டம் விமர்சையாக் கொண்டாடினா. பொங்கலை பெரிசா கொண்டாடலாம் எண்டு நினைக்கிறன்.....”

“அதுக்கென்ன கொண்டாட வேண்டியதுதானே?”

“எனக்கென்னப்பா தெரியும்! நீங்களும் அம்மாவும் வந்தால் சிறப்பாயிருக்கும்....”

“வர்றதெண்டா உடனை நடக்கிற அலுவலே? விசா உடனை தருவாங்களே?”

“அதொண்டும் பிரச்சனை இல்லையப்பா. நாங்கள் பொன்சர் பண்ணி அனுப்பினா ரண்டு கிழமையிலை கிடைச்சிடும். ரிக்கற் எல்லாம் நான் ஒன் லைன்லை செய்து அனுப்புறன்...”

“சரி சரி விசா வரட்டும் பாப்பம்” என்று விருப்பம் இல்லாதவர் பூலீல் சொன்னாலும் மனதிற்குள் ஆசை இருந்ததுறான்ஸ் பாக்கவேணுமெண்டு. எழுந்து ஹாலுக்கு வந்தார். நாடகம் பார்த்துக்கொண்டிருந்தாலும் செல்லம்மாவின் காதுகளும் ரெலிபோன் உரையாடலையே கேட்டுக் கொண்டிருந்ததால் எல்லாம் புரிந்துவிட்டது.

அடுத்த நாளிலிருந்து வீடு



# V one DISTRIBUTION

**Rheinische Str. 70 44137 Dortmund**

T 0231 330 16 114 ✉ V-ONE@outlook.de

**Handy Verträge ab 1,- €**
**Handy Zubehör**
**Handys**
**Handy Reparatur**
**Festnetz DSL**
**Prepaid SIM**
**Prepaid Guthaben**

**KFZ Gutachten**
**Passbilder**
**Event Fotos& Videos**

**Privat Kredit**

**Handy Versicherung**
**KFZ Versicherung**
**Haftplicht Versicherung**
**und vieles mehr...**

vodafone
YUPPTV
ay yıldız
dpd Pickup
FLiXBUS
Lyca mobile Call the world for less
Lyca TV
WESTERN UNION WU moving money for better
BLACK DIAMOND
ortel MOBILE
Ria Money Transfer
LEBARA
yourfone
T · · Mobile ·
MoneyGram
unitymedia
KFZ-SACHVERSTÄNDIGER AMBERG
1&1
O2
otelo

பரபரப்பானது. மகன் விரும்பிச் சாப்பிடும் இனிப்புப் பலகாரங்களில் இருந்து விதம் விதமான ஊறுகாய் வகைகள் எல்லாம் ஒரே வாரத்தில் தயாரானது.

கட்டுநாயக்காவில் இருந்து எமிரேட்சின் போயிங் 777 விமானத்தில் ஏறி துபாயில் இரண்டு மணி நேரம் ஓய்விற்குப்பின் மீண்டும் அடுத்த போயிங் எடுத்து பாரிசின் சால்டி கோல் விமான நிலையத்தல் காலையில் விமானம் இறங்கியபோது இருவருக்கு குளிர் எலும்புவரை சில்லிட்டது.

இமிக்கிரேசன் கவுண்டரில் இருந்து வெளியேறி பயணப் பொதிகளை எடுத்துக்கொண்டு வெளியேற முயன்ற போது நன்றாக மூக்குச் சிவந்த வெள்ளைக்கார அதிகாரி ஒருவர் வந்து பிரெஞ்சில் ஏதோ சொல்ல ராகவன் திரு திருவென முழிசிக்கொண்டு நின்றார். ஒரு பேப்பரைக் கையில் கொடுத்துவிட்டுச் அதிகாரி சென்றுவிட்டார்.

எதுவும் புரியாமல் வெளியில் வந்தவரிடம் பேப்பரை வாங்கிப் பார்த்த மகன் சொன்னான் "அப்பா உங்கள் சூட்கேசிற்குள் ஏதோ சந்தேகத்திற்கிடமான பொருட்கள் இருந்ததால் தாங்கள் திறந்து பாத்து சில பொருட்களை எடுத்திட்டம் எண்டு எழுதியிருக்கு. அப்பிடி என்னப்பா கொண்டந்த நீங்கள்?".

ராகவன் அப்பொழுதுதான் சூட்கேஸைப் பார்த்தார் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. ஆசையாகக் கொண்டு வந்த இனிப்புப் பலாகாரங்கள் எதுவும் இல்லை!.

"படுபாவி! இப்படிப் பண்ணிட்டானே. கட்டேலை போறவன்" செல்லம்மாள் திட்டத் தொடங்கி விட்டாள். குழந்தை ராஜா சமாதானப் படுத்தி வீட்டுக்கு அழைத்துச் சென்றான். காருக்குள் இருந்தாலும் ராகவன் குளிரில் நடுங்க செல்லம்மாளோ பலகாரத்தைப் பற்றியே புலம்பிக்கொண்டு வந்தாள்.

ஒரு மணிநேர பயணத்திற்குப் பின் பாரிசின் புறநகர்ப் பகுதியான ஒரு சிறு கிராமத்தில் புல் வெளிகளுக்கு நடுவில் அமைந்திருந்த ஒரு வீட்டின் முன் கார் நின்றது. வீட்டு முற்றத்தில் அழகாகக் கோலம் போடப்பட்டிருந்தது. செல்லம்மாள் மட்டுமல்ல ராகவனுமதான் திகைத்துவிட்டார்கள்! ஆச்சரியத்தோடு மகனைப் பார்க்க அவன் சொன்னான் "உங்க மருமகள் கிறிஸ்ற்றினா போட்ட கோலம்தான்."

அந்த ஆச்சரியம் நீங்குவதற்கு முன் அடுத்த ஆச்சரியம் கதவைத் திறந்ததும் அழகான பட்டுச் சேலை கட்டி நெறள்றியில் குங்குமப் பொட்டிட்டு கழுத்தில் தாலியுடன் கொச்சசைத் தமிழில் "வணக்கம்" சொல்லி வரவேற்றாள் வெள்ளைக்கார மருமகள் கிறிஸ்ற்றினா.

உள்ளே போய் சோபாவில் அமர்ந்த சில நிமிடங்களில் மூன்றாவது ஆச்சரியம் சாப்பிடுவதற்கு இனிப்புப் பலகாரங்கள் வழங்கப்பட்டது. செல்லம்மாள் மகனை ஆச்சரியத்துடன் பார்த்தாள்!

"அம்மா இது கிறிஸ்ற்றினா செய்யேல்லை என்ரை பிறெண்டினனை மனிசி வந்து செய்து குடுத்தவ."

ராகவனுக்கும் செல்லம்மாவிற்கும் எல்லாம் ஆச்சரியமாகவே இருந்தது.

அடுத்த வாரம் குழந்தை ராஜா வீட்டில் பொங்கல் கொண்டாட்டம். செல்லம்மாளின் வெள்ளைக்கார மருமகள் மாமியாரிடம் கேட்டுக் கேட்டு எல்லாவற்றையும் செய்து கொண்டிருந்தாள்.

பொங்கல் ஊரில் பொங்குவதைப் போல் முற்றத்தில் அடுப்பு வைத்து மண் பானையில் அல்ல! கிச்சினுக்குள் காஸ் அடுப்பில் அல்மனியப் பானையில்த்தான்.

இது வெளிநாட்டு மருமகளினால் கொண்டாடப்படும் உள்நாட்டுப் பொங்கல்!

ராகவன் ஜன்னல் பக்கம் நின்று சூரியனைத் தேடிக்கொண்டிருந்தார்.

MEDIA ASIA
Another Home of Southasian Channels
For satellite news, live radios, TV-Guide, Radio-schedules, contact details of Tamil channels in the world etc.
www.mediaasia.in


CENTURY
TRAVELS GMBH
Sommer 2020
Frankfurt-München
Colombo
inklusive
Steuern und
Gebühren
ab 599€
Buchen Sie schnell und
Sichern Sie Ihre Platz
Rheinische Strasse 29
44137 Dortmund
Fon : 0231 5574 319
Fon : 0231 5896 557
Mob : 017621682149



Radio - by - Phone
ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி
15 YEARS ANNIVERSARY
தொலைபேசி இலக்கத்தில்
ஐரோப்பியத் தமிழ் வானொலி
அழையுங்கள்!
வானொலியைக்
கேட்டு மகிழுங்கள்..!!
0221 9888014
01 80140659
044 5133032
0330 332 6349
0787 72527
6474969717
5149003078
7167480305
0280725194
நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
00 49 231 700 977 60
மேலதீக விபரங்களுக்கு... www.etr.fm